Koviloor Digital Library

நூல்

கந்தபுராணம் தக்ஷகாண்டம்
உபதேசப் படலம்

KMM0963

Koviloor Digital Library

KMM09463
D
Koviloor Digital Library
332
1249
2/2
1758

உ

கணபதி துணை.

கந்தபுராணம் §

தக்ஷகாண்டம் உபதேசப் படலம்.

சத்தியலோகத்திலே, பிரமசபையிலே, பிரமதேவர், தமது புத்திரர்கள், இந்திராதி தேவர், முனிவர் முதலிய யாவருஞ்சூழ்ந்து போற்ற வீற்றிருந்தருளினர். அப்போது, அவர் புத்திரர் பதின்மருள் ஒருவனாகிய தக்கனென்பவன், அவரை வணங்கிச், சிருஷ்டி கிருத்திய மேன்மைவாய்ந்த எமது பிதாவே! சமஸ்த தேவர்க்கும் முதல்வரும், ஞான குணத்தலைவரும், முத்தேவரின் மேலானவரும், அழிவில்லாதவரும், ஏகரும், சர்வான்மாக்களினும் அந்தர்யாமியாய் நீக்கமின்றி வசிக்கின்ற சர்வபரிபூரணருமா யுள்ளவரின்னாரென்று, அடியேன் சந்தேகமறத் தெளிந்துகொள்ளும்படி சொல்லியருளுகவென்று பிரார்த்தித்தான்.

அதுகேட்ட பிரமதேவர், வாராய்தக்கனே! உன் கேள்விமிக நன்மைதருவதேயாம். உற்றுக்கேட்பாயாகவென்று கூறுகின்றார். முன்னொருகாலத்திலே, நாராயணரும் நானும், மயக்கத்தால் நானே

§ இக்கந்தபுராணம், சதாசிவமுகோற்பவ நிஷ்களங்கவிசிஷ்ட முன்னை ஆதிசைவகுலத்தில் அவதரித்தருளியவரும், சிவக்ஷேத்திரங்களுட்சிறந்த காஞ்சீபுர குமரகோட்ட திவ்யாலயார்ச்சகரும், திருவருட் பரிபூர்த்தி பெற்றவருமாகிய ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாராற் செந்தமிழ்மொழியிற் பாடியருளப்பெற்றது. இம்மட்டோ? ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானே முதலில், "திகட சக்கரச் செம்முகமைந்துளான்" என்று அடியெடுத்தருளப்பெற்று, அதனை அதற்குயிரெனக்கொண்டு, ஒவ்வொருதினமும் பாடுகின்ற திருவிருத்தங்களை அப்பெருமான் திருப்பள்ளி கொண்டருளும் திவ்யாலயத்திற் றிருவடிசமர்ப்பணமாகச் சேர்த்துவைக்க, அத்தகைய ஏகாந்தஸ்தானத்தில் வீற்றிருந்தருளுகின்ற சர்வலோக நாயகருந் தயாபரமூர்த்தியாகிய அப்பெருமான், அத்திருவிருத்தங்களைத் திருக்கண்சாத்திப் பரிசீலனஞ் செய்யப்பெற்றது. இன்னும் பற்பல அற்புதமகிமையுள்ளது.

இத்தகைய உத்தமோத்தம செந்தமிழ்க்கந்தபுராணம், இரிதுர்ஜன வசத்தராய் ஒருசமயத்தாபிமானத்தாக்கத்தால் உண்மை மறந்த காசிவிசுவேச சந்நிதியிலே நாராயணனே பரம்பொருளென்று பொய்புகன்று கைதம்பிக்கப்பட்ட வியாசராக்கிய வடமொழிக் கந்தபுராணத்தைக் காட்டிலும், அதிமுக்கியப் பிரமாணமாகப் பெரியோர்களாற் சிரமேற்கொள்ளப் பெற்றுவருதலால், இப்பிரமோபதேசத்திலுள்ள சிவபரத்துவவாய்மையை, வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லோரும் மற்றெல்லோரும் உறுதிமொழியாய்க்கொண்டு கடைப்பிடிப்பார்களென்க.

Koviloor Digital Library

பிரமம், நானே பிரமமென்றகந்தைகொண்டு யுத்தஞ்செய்து மாறுபட்டு நிற்கும்போது, அகந்தை அடியோடு தொலைந்து, நாம் பிரமமல்ல, பிரமப்பொருளாகிய பரமசிவனை வழிபாடுசெய்துய்யவேண்டிய சீவர்களே யென்றுண்மை தெளிந்துய்யும் பொருட்டு, அங்கிருவருக்கும், மத்தியிலே அக்கினிப் பிழம்பாகிய ஒரு மலை வடிவமாகி நின்றருளிய பரமசிவனே, எங்களுக்கும் மற்றெல்லாருக்கும்மேலாய், எம்மையெல்லாம் தன் கீழடிமைகளாக வைத்தாளுகின்ற பரம்பொருளென்று எடுத்துக்காட்டி விளக்கினர். இந்தச் சரித்திரம் வேதாகம புராணாதிக ளெங்குமுள்ளனவே. ஆயினும் அதற்குரிய உத்தமோத்தம சிவ க்ஷேத்திரமாகிய அருணாசலமான்மிய மூலமாகச் சிறிதுகாட்டி அதன்மேல் எடுத்துக்கொண்ட விஷயத்திற் செல்வோம்.

சேதனாசேதனப் §பிரபஞ்சங்களெல்லாவற்றையும், தனக்கு அடிமையுமுடைமையுமாக்கொண்டுஆளுகின்ற பரமேஸ்வரனொருவனே, பிரமவிஷ்ணு ருத்திராதி தேவர்க்கும், மற்றும்யாவர்க்கும் மேலான முழுமுதற் பரம்பொருளென்பதைப், பெரியோர்கள் நிர்விவாத மா[illegible]கப்பிரமாணங்களால் நிச்சயித்துரைப்பார்கள். இவ்வுண்மைய[illegible]க லேசுவாக உணர்ந்துகொள்ளுதற்குரிய அதிமுக்கிய காரணங்கள், அப்பரமேசுரனுடைய சர்வஞ்ஞதை, திருப்தி, அநாதிபோதம், சுதந்திரதை, அலுப்தசக்தி, அநந்தசக்தி யென்னும் சுத்த குணங்களாறுமேயாம். இச்சுத்த குணங்களாறும் பரமேசுரனுக்கே யுள்ளன. பிரம விஷ்ணுக்கள், சுத்தாசுத்த மாயாநிதராகிய பரமேசுரனாணையால், அசுத்தமாயையின் கீழுள்ள பிரகிருதிப் பாற்பட்ட ராஜஸாதி குணங்களை ஆசிரயித்துச் சிருஷ்டியாதி தொழில் செய்கின்றவர்களே. சர்வஞ்ஞதாதி சுத்த குணங்களை வகிப்பவர்களல்லர்.

இனி, இச் சுத்த குணங்களிற், சர்வஞ்ஞதை, எல்லாவற்றையும் ஒருங்கே யறியும் அறிவாகிய முற்றறி வென்றும், திருப்தி, அளவுகடந்த இன்பமாகிய வரம்பி லின்பமென்றும், அநாதிபோதம், தனக்குமே லொருவரிருந்து அவரால் நீக்கப்பெறுதலின்றி இயல்பாகவே பாசங்களி னீங்குதலென்றும், சுதந்திரதை, பிறர் வசப்படாமையாகிய தன் வசமென்றும், அலுப்தசக்தி, நிறைந்த வல்

§ சேதனம், அறிவுள்ள சீவப்பிரபஞ்சம், அசேதனம், அறிவில்லாத தனுகரண புவனாதி பிரபஞ்சம்.

Koviloor Digital Library

லடமாகிய குறைவிலாற்றலென்றும், அநந்தசக்தி சர்வான்மாக்களுக்கும் அருளுகின்ற பேரருளுடைமையென்றும் தமிழில் வழங்குவன். இந்தச் சுத்த குணங்களாறும், பரமேசுரனுக்கே யுள்ளனவென்பது எங்ஙனமெனில்? விஷ்ணுவாதியர்க்குரியமூலப்பிரகிருதி சம்பந்தமான பிராகிருத புவனவியாபக மாத்திரமன்றி, அதன்மேற் சூக்குமப் பிரகிருதியாகிய அசுத்தமாயா புவனம், அதன்மேற் பரப்பிரகிருதி யாகிய சுத்தமாயா புவனமுதல் எல்லாப் புவனங்களிலும் வியாபகியாய்ப், பல்லாயிரங்கோடி அண்டங்களினுமுள்ள எல்லாப் பொருள்களையும் உள்ளும் புறம்பும் நேரே தெரிந்து நடத்தலால், முற்றறிவும், தமது அநுபவத்திற்கென்று யாதொருபொருளையும் விரும்பாமையால், வரம்பிலின்பமும், பாசரகிதனாகிய தனக்குமேலொருவரிருந்து பாசநீக்குதல் எக்காலத்தும் எவ்விதத்துமில்லையாதலால், இயல்பாகவே பாசநீக்கமும், பிறர் வசப்பட்டுத்தான் விரும்பியது கிடைக்காமையும், விரும்பாதது கிடைத்தலுமாகிய குற்றம் தனக்கு எவ்விடத்து மில்லையாதலால், தன்வசமும், எக்காலத்தும் எல்லா வண்டங்களிலும் யாதோரிளைப்புமின்றிச் சங்கற்ப மாத்திரையானே தொழி லியற்றுதலால், குறைவில[illegible]ம், மற்றையோர் செய்யும் எல்லைப்பட்ட தயைபோலன்றி பாவி[illegible]தம்இடையீடின்றி எல்லைப்படாத பெருந்தயை எப்போதுஞ் செய்தலாற் பேரருளுடைமையும், பரமேசுரனுக்கே யுள்ளனவென்பது வேத சிவாகம புராணேதிகாசாதி சமஸ்த சாஸ்திர சம்மதமென்க.

இனி, விஷ்ணுவாதியர்க்கு இவ்வாறு சுத்தகுணங்களில்லையென்பதெப்படியெனில்? விஷ்ணுமூர்த்தி, ஆலாகலவிஷ வெப்பத்தால் மயங்கி யெங்குமோடித் திருக்கைலை யடைந்து சிவாநுக்கிரகத்தால் அத்துன்ப நீங்கிய இது ஒன்றுமேயே, இன்னது செய்யின் இன்னது வருமென்று அறிந்துகொள்ள மாட்டாமையால், முற்றறிவின்மையும், பரமசிவனை வேண்டி அத்துன்பநீக்கிக் கொண்டமையால், வரம்பிலின்ப மின்மையும், விஷ வெப்பத்தால் உடல் கருகப்பட்டமை முதலியன பாச சம்பந்தத்தாலன்றி வேறில்லையாதலால், இயல்பாகவே பாசநீக்க மின்மையும், கடலில் விரும்பிய அமுதங் கிடைக்கப்பெறாமையாலும், விரும்பாத விஷங்கிடைக்கப் பெற்றமையாலும், தன்வச மின்மையும், நினைத்தபடி யமுதமெடுத்துக் கொள்ளமுடியாமையால், குறைவிலாற்ற லின்மையும், சிவாக்ஞையால் விக்கினேசுரப் பெருமானது பேரருளை வேண்டிப் பூசித்துச்

Koviloor Digital Library

சுரர் அசுரர்களாற் கடல்கடைந் தெடுக்கப்பெற்ற அமுதத்தைநமக்கும் கிடைக்குமென்று பாடுபட்டுக் கடைந்த அசுரரிடத்திரக்கமின்றி வஞ்சித்துக் கொடாதொழிந்தமையாற், பொருளின்மையுமுடையரென்பது யாவரும் நடுவுநிலைமை நோக்கி யொத்துக்கொள்ள வேண்டிய விஷயமே. இன்னும் இதுபோல விஷ்ணு மூர்த்தி, மேற்கூறிய சுத்த குணங்களாறையும் வகிக்கப்பெற்றவ ரல்லரென்பதற்கு, அநேகம் பிரமாணங்கள் அவர் சரித்திரங்களிலேயே உள்ளன. அவை யெல்லாம் விரிப்பிற் பெருகும். இவர்க்கே இப்படியானால் இவர் கீழுள்ளபிரமாதி தேவர்களைப்பற்றிச்சொல்லுவானேன். அமைக.

இத்தகைய சுத்த சாட்குண்ய பரிபூரணராகிய பரமசிவனது சத்தி சங்கற்பமாத்திரத்தால், அவரது சந்நிதியில் பிரமா உதித்து ராஜதகுணத்தை உபகரணமாக்கொண்டு, சிருஷ்டி கிருத்தியமும், அப்படியே விஷ்ணு உதித்துச், சாத்துவிக குணத்தை உபகரணமாக்கொண்டு, திதிகிருத்தியமும், காலருத்திரர் உதித்து, தாமசகுணத்தை உபகரணமாக்கொண்டு, சங்காரகிருத்தியமும் செய்வார்கள். இம்மூவருள்ளே பிரமாவுக்குச் சுபாவகுணமும் தொழிற்குணமும் ராஜதமே. விஷ்ணுவுக்குச் சுபாவகுணம் தாமசமே. ருத்திரருக்குச் சுபாவகுணம் சாத்துவிகமே. இதனை,

ரஜோகுணேன ஸஞ்சர்ஜோ பிரஹ்மாதிஷ்டாயதத்குணம்
ஸ்ருஷ்டா பவதி ஸர்வஸ்ய ஜகத: பண்டிதோத்தம:
குணேன தமஸா சர்வோ விஷ்ணுஸ் ஸத்வகுணப்புதா:
அதிஷ்டாயபவேத்ஸர்வ ஜகத:பாலக: ப்ரபு:
ததாஸத்வகுணசர்வோ ருத்ரோவிப்ராஸ் தமோகுணம்
அதிஷ்டாயபவேத்கர்த்தா ஜகதஸ் ஸத்பவாதிக:

என்ற சூதசங்கிதை சிவமான்மிய கண்டம் எட்டாம் அத்தியாயம் (௩௦, ௩௧, ௩௨, ம் சுலோகங்களாற் காண்க.

இ-ள். ராஜதகுணத்திற் மூடுண்ட பிரமா, அந்த ராஜதகுணத்தையே அதிஷ்டித்துச் சர்வ செகத்துக் கும் சிருஷ்டிகர்த்தாவாயினர். தாமசகுணத்திற் மூடுண்ட விஷ்ணு, சத்துவகுணத்தை அதிஷ்டித்துச் சர்வ செகத்துக்கும் திதி கர்த்தாவாயினர். சத்

Koviloor Digital Library

துவகுணத்தினால் மூடுண்ட ருத்திரர் § தாமசகுணத்தை அதிஷ்டித்துச் சர்வசெகத்துக்கும் சங்கார காரணராயினர் என்பதாம் இதனைத்தமிழில் மொழி பெயர்த்துள்ள சூதசங்கிதைசிவமான்மிய கண்டம்.

வதிதரு முத் தொழிற்குங்கா ரணனருளாற் பிரமன் வயங்கு
மிராசதகுணசு பாவனே யாகி. (கங)

அக்குணசா தனஞ்செய்து கொண்டுபடைத் திடுவ னாழியான்
றமகுணசு பாவனே யாகி, மிக்கநற்சத் துவகுணசா தனஞ்செய்து
கொண்டு வியனிலங்காத் திடுவனுயர் மேன்மையுருத் திரன்றான்
முக்கியசத் துவகுணசு பாவனே யாகி முடித்திடுவன் றமோ
குணசா தனஞ்செய்து கொண்டு, தொக்குறுமிம் முக்குணபே தங்
களா லெடுத்துச் சொலுமூவர் மூர்த்திபே தங்களுமநேகம். (கச

என்றுஞ் செய்யுள்களாலும் காண்க.

இதனை, மேற்காட்டிய அவ்வக் குணங்களின் செயல்கள், அவரவரிடத்து இருத்தலை நோக்கி நன்கு தெளியலாம். அதாவது, விஷ்ணுவினிடத்துச் சுபாவமாயுள்ள தாமசகுணத்திற் குரிய, காமக்குரோத சோகமோக வஞ்சவேஷ பயங்கர நிலைவர்ண நித்திராதிகள் பெரும்பாலுமுள்ளன என்பது, கற்றவர் மற்றவர் யாவர்க்குந்தெரிந்த

---

§ இந்தருத்திரசங்காரகாரணராகிய குணருத்திரரே யாம். துரியரல்லர். துரியசிவன், இந்தஹேயகுணங்கள்மூன்றையுங் கடந்தமையாற், குணாதீதனென்றும், அஷ்டமங்கள திவ்வியகுணத்தனென்றும்' வேதசிவாகம புராணேதிகாசாதிசகலசாஸ்திரங்களுங் கூறுகின்றன. இவ்வுண்மையுணர்ந்துய்யும் ஊழ்வலியில்லார்சிலர், குணருத்திரர் சங்காரத்தொழின் மாத்திரைக்கேகிகித்ததாமசகுணமே, துரியசிவனுக் குண்டென்றும், சிவபுராணங்கள் தாமசபுராணமென்றுங் கூறுகின்றனர். அது, அவரை இறுகப்பற்றிய அறியாமையன்றி வேறில்லை. உலகத்தில் ஏதேனுமொரு தொழிலதிகாரம் பெற்றதலைவர்கள், எவ்வளவு சாந்தகுணசீலர்களாயிருந்தாலுந், தங்கீழுள்ளாரிடத்து அக்கிரமங் கண்டால், அப்பொழுதே தண்டித்தலாதி குரூரச்செயல் செய்து நன்னெறிப்படுத்தவேண்டிய தவசியம். அச்செயல் கோபமில்லையேல்நிகழாது. அதுவும் நெடுநேரமில்லாது. இதனை, "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங்காத்தலரிது." என்ற தேவசுருதியாலுங் காணலாம். இதுபோலத்தமது சுபாவகுணம் சத்துவமேயாகக் கொண்ட குணருத்திரரும்'சர்வலோகசங்காரத்தின் பொருட்டு,அந்தந்தச்சமயம் மேற்கொண்டொழியும் அல்பக்கோப மாத்திரைநோக்கியே, தாமசகுணத்தை உபகரணமாகக் கொண்டவரென்பதொன்றன்றித்,தாமசகுணமேசுபாவமாகக்கொண்ட விஷ்ணுமூர்த்திக்குப்போலஅத்தாமசகுணத்துக்குரிய சோகமோக பயங்கராதிகள், எந்த இடத்திலும் எவ்விதத்திலும் இல்லாதவரென்பது, வேதசிவாகம புராணேதிகாசாதிகளின் விளக்கமே.

Koviloor Digital Library

விஷயமே. விஷ்ணு மூர்த்தி, தனக்குத் திதி நிருத்தியத் தளவி லாவது மேற்கொண்ட சாத்துவிக குணமிருந்தும், அதனை அடி யோடழித்து மேற்பட்டெழுந்த தமது சுபாவகுணமாகிய தா மசவழிப்பட்டு நின்றமையாலன்றோ? சலந்தராசுரன் என்பவன், சிவசம்பந்தத்தால் சமஸ்த தேவாசுராதி எவரினும் மேம்பட்டவலி யுடையனுய்த், தேவரெல்லாரையுந் தாக்கி அடக்கிக் கொடுங்கோல் செலுத்துகின்றனனென்பதும், தான் இந்திராதியர் வேண்டுகோ ளுக்காக, அவனுடன் இருபதினாயிரம் வருஷம் மாயாயுத்தங்களெல் லாம் செய்தும் வெல்லமுடியாமல், இலகுவாய் விலகிக்கொள்ளும் வழி இதுதானென்று அவனைப் புகழ்ந்து பாராட்டித் தப்பிப்பிழை த்து வந்ததும் தெரிந்திருந்தும், அவன் பத்தினியாகிய கற்பிற் சிறந்த உத்தமி பிருந்தாதேவியை விரும்பி, அளவு கடந்து முறுகி வளர்ந்த காமமும், அது விரைந்து கைகூடப்பெறாமையால் அவனை எந்த உபாயத்தாலாவது கொன்றொழிக்க வேண்டுமென்றெழுந்த குரோதமும், பிருந்தாசம்போகத்தில் வரம்புகடந் தெழுந்தமோக மும், அது கிட்டப்பெறாமையால் ஏற்பட்ட சோகமும், சலந்தரன் இறந்தொழிந்தானென்று தெரிந்த நிமிஷமே, பிருந்தையைப்புணர் தற்கு இதுதான் பொருத்தமென்று கொண்ட வஞ்சவேஷமும், நினைத்தற்கு சொல்லமுடியாத பயங்கரமும், முதலிய தாமசகுணச் செயல்கள் பெரும்பாலும் முன்னணியாயின. இவைபுராண இதிகாசா திகள் பிரசித்தமே.

இனிப், பல்லாயிரம் கோபிகாஸ்திரிகளை முறைகடந்து நீங்காது விரும்பிப் புணர்ந்தமையாற் காமமும், † மகரிஷியாகிய பிருகுபத் தினி, பிராமணஸ்திரீ, அதிலும் பூரண கெர்ப்பிணி, அதிலும் தனக்குத் தாயாமென்பதனையுந்தான். ஒரு சிறிதும். இரக்கஞ்சாந்தமில்லா மல், பெருங்கோபங்கொண்டு. முடிவிற் பிரயோகிக்கும் சக்கராயு தத்தாற் கொன்றமையாற் குரோதமும், ராக்ஷசன் அபகரித்த,கற் பிற்சிறந்த சீதாதேவியை இழந்தமையாலும், பின்பு இந்திரசித்து, மாயா சீதையைக் காட்டி வெட்டியபோது, அதனை உண்மை யல்ல

---

† இதற்கு, அவர் தான் சத்தியப் பிரமசாரியென்றது முதலியசமாதா னங்கூறுவர். பிறர்க்கு நன்னெறி காட்டவேண்டிய அவரே அத்தன் னெறி யொழுகாநின்றது பொருத்தமன்றாதலின், அதுச்சமாதானமா காதென்க.

Koviloor Digital Library

வென்று

அறிந்துக் கொள்ள மாட்டாமல், பத்தினி வியோகம் என்றே கொண்டமையாலும், சோகமோகங்களும், மதுகைடவர்கள், சுந்தோபசுந்தர், வாலி முதலியோரை எதிர்த்துநின்று கொல்லமாட்டாமல்; வஞ்சித்துக் கொன்றமையால் வஞ்சவேஷமும், திரிபுரத்தசுரர், சலந்தரன், பாணாசுரன், ‡ சூரபத்மன் முதலியோர்க்கும், பாற்கடலிற்றோன்றிய விஷம் முதலியவற்றிற்கும், பயந்தமையால், பயங்கரமும்,

---

‡ பாணாசுரனை, விஷ்ணுமூர்த்தி வென்றதாகக் கூறுவர். அது சிவானுக்கிரகத்தாலன்றி வேறில்லை. அதாவது. பாணாசுரன், அரிபிரமேந்திராதியாவரையும் வென்று நிகரின்றி அரசாளும்போது, நெடுங்காலம் தன்னோடு எதிர்த்து யுத்தஞ் செய்வாரின்றித் தன்புயந்தின வெடுத்தலால், பரமசிவனை வணங்கிச் சுவாமீ என்னுடன் யுத்தஞ்செய்து, புயத்தினவை மாற்றவேண்டுமென்று வேண்டப், பரமசிவன், நமதுபக்தனாகிய கிருஷ்ணன்; உன்னுடன் யுத்தஞ்செய்து மாற்றுவான் என்று கூறியருளப், பாணாசுரன், சுவாமீ? என்னுடன் முப்பதுமுறை யுத்தஞ்செய்து புறங்கொடுத்தோடின கண்ணனோ! மாற்றுகிறவன் என்று கூறப், பாணனே? கண்ணனை, உனக்குத் தோற்றவனென்று ஏழனஞ்செய்யாதே. அவன் நமது உத்தமபக்தனாகிய உபமன்ய முனிவனிடத்துச், சிவதீக்ஷைபெற்று, வலியுடையவனாயிருக்கின்றான்; அவனே உன் புயத்தினவை மாற்றுவானென்று கூறியருளிப், பின்பு கண்ணபகவானுக்குந் தெரிவித்து, யுத்தத்திற்குவரச் செய்தருளினர். அவ்வாறு வந்த கண்ணபிரான், விநாயகர் சுப்பிரமணியர் அம்பிகை மூவரையும் வணங்கி உத்தரவு பெற்றுக்கொண்டு, முதல்வாயிலில் வந்து பரமசிவனை வணங்கிச், சுவாமீ? அடியேன் பௌத்திரனாகிய அநிருத்தனை மீட்டுக்கொள்ள வழிதந்தருளுகவென்று வேண்ட, என்னை வென்று உள்ளே செல்லுக என்று பரமசிவன் கூறச், சர்வலோக நாயகராகிய உம்முடன் யுத்தஞ்செய்ய என் மனந் துணியுமா? துணிந்தாலும் முடிவுபெறுமா? என்று மேலும் வணங்கி வேண்டப் பரமசிவன் வாராய்கண்ணனே? நீ, முன், மைநாகபர்வதத்தில், அறுபதினாயிரம்வருஷம் நம்மை நோக்கித் தவஞ்செய்ததற்கு வந்து, வேண்டியவரங்களுந் தந்து, பின் நிகழ்ச்சிநோக்கி, நம்மையும் வெல்லும்படியான வரமும் உனக்குத் தந்தோம். அதனை நிறைவேற்றவேண்டியது நமது கடமையாதலால், நீ தைரியமாக யுத்தஞ்செய்கவென்றருள, அதுகேட்ட கண்ணபிரான் மிகுந்த பயத்துடன் யுத்தஞ்செய்து, முடிவில், தமது பாணத்தைச் சிவபாதத்தில் விழும்படி செய்து வணக்கங்காட்டிப், பரமசிவாக்ஞையால் உட்சென்று பாணாசுரனை வென்றானன்றி வேறில்லை. இது காஞ்சியான்மியம் வாணீசப்படலத்தில் வரிசையாக விரிவாய்க் காணலாம்.

Koviloor Digital Library

முதலிய தாமசகுண காரியங்கள் மேலும் விளக்கமே. இப்படியே இன்னும் பல விஷ்ணுசரித்திரங்களிலுள்ளன. விரிப்பிற்பெருகும்

இனிச், சீதாவியோகாதிகளால் வந்த சோகமோகாதிகளை, விஷ்ணுமூர்த்தி மாநுடரூபியாய் வந்ததற்கியைய நடித்துக்காட்டின நாடக மாத்திரையேயன்றி எதார்த்தமல்லவென்று சிலர் சமாதானங்கூறுவர். மானிடரூபியாய் வந்ததற்கியைய நடித்துக்காட்டுவது, அம்மானிடரைப்போலப், பிரமசரிய கிரகஸ்தாதி விரதம்மேற்கொண்டு, ஜெபதபதியானாதிகள் செய்தல், உண்டுடுத்துறங்கிவாழ்தல், மற்றுந்தொழில்களைச் செய்தல் முதலியவைகளிலன்றிக், கற்பிற் சிறந்த உத்தமதர்ம பத்தினியாரைத், துஷ்டனாகிய ராக்ஷதன் அபகரிக்கவிட்டதும், அப்பத்தினியாரிருக்குமிடம் தெரியாது வருந்தி சுக்கிரீவனைத் துணைக்கொண்டதும், அவனுக்குப் பிரதிப்பிரயோசனம் முன்னரேகொடுப்பதாக, அவன்பத்தினியை அபகரித்த வாலியை, நேர்நின்று வெல்லமாட்டாமல், வஞ்சித்து மறைந்துநின்றதும், வாலி சுக்கிரீவ வடிவபேதம் தெரியமாட்டாமல், சுக்கிரீவனுக்கு அடையாளம் சூட்டியதும், விபீஷணசகாயத்தால் அங்குள்ள உளவுகள் தெரிந்ததும், நாகபாசத்தால் கட்டுண்டு மயங்கியதும், பின்பு சஞ்சீவி மூலிகையால் மயக்கந்தெளிந்ததும், மாயாசீதையென்றுணரமாட்டாமல் தர்மபத்தினி வியோகமானதாகவேவருந்தியதும். இன்னும் இவைபோன்ற பற்பல செயல்களும், நாடகமாத்திரையாய் நடித்துக்காட்டினவென்பது பொருந்துமா? இவையெல்லாம் சத்தியவிரதத்துக்கு முழுவிரோதமல்லவா? இச்சரித்திர முழுதும் வான்மீகி வாக்கியங்களே.

இனி சாக்ஷாத் விஷ்ணுமூர்த்தியே, சலந்தராசுரனது கற்பிற்சிறந்த உத்தமபத்தினியை வஞ்சித்துப் புணர்ந்தபோது, அவ்வுத்தமி பின்பு உண்மைதெரிந்து, அவ்விஷ்ணுமூர்த்திக்கு நீ பத்தினியை இழந்துவருந்துகவெனச்சாபங்கொடுத்துவிட்டு, அக்கினிப்பிரவேசமாயொழிந்த பின்னும், அம்மோகந்தணியாமல், அவ்வுடம்பு சாம்பரிற்கிடந்துபுரண்டதும், திரிகர்த்தாவாகிய இவருக்கு ஆபத்து வந்துவிட்டதேயென்று, வருந்திய தேவர் வேண்டுகோட்கிரங்கி, உமையம்மையார்கொடுத்தருளிய விதைகளை, அச்சாம்பரில் விதைத்து, அதில் முளைத்தெழுந்தவரிருக்குப்பிருந்தையென்றுபெயரிட்டு, அதனைத்தரிப்பித்தமையால். அம்மோகந்தணியப்பெற்றதும்,

Koviloor Digital Library

அப்பிருந்தையாகிய துளவத்தையே, அதிப்பிரியமாக எப்போதும் அணிந்துவருவது முதலிய இன்னோரன்ன பற்பலசெயல்களும் நாடகந்தானே? ஆனாலதற்கென்னபொருத்தமோ? இச்சரித்திரமோ அவ் விஷ்ணுமூர்த்தியின் அம்சபூதராகியசாக்ஷாது வியாசபகவான்வாக்கியமாகியகந்தபுராணத்திலுள்ளதேயாம். ஆகவேமேற்கூறியவெல்லாம், அவ்விஷ்ணுமூர்த்தியின்சுபாவகுணமாகியதாமசச்செயல்களேயன்றிவேறில்லை யென்பதேதுணிவென்க.

இனி, மேற்கூறிய பிரமவிஷ்ணுருத்திரர்கள் செய்யும்மூன்று கிருத்தியங்களுள்ளே, சிருஷ்டியாவது, தனுகரணபுவன போகங்களாகியபிரபஞ்சத்தைமாயையாகிய முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்துச், சீவர்களை அப்பிரபஞ்சத்துடன் சேர்ப்பித்தல். ஸ்திதியாவது, சுகதுக்கபோகங்களைப் புசிப்பிக்கும்பொருட்டுச் சீவர்களை அத்தனுகரணபுவனபோகங்களில்நிலைபெறச்செய்தல்.சங்காரமாவது, சிருஷ்டிஸ்திதிகளிலகப்பட்டுப பற்பலயோனிகளிலும்புகுந்துதொழில்களைச்செய்து, சுகதுக்கங்களையனுபவித்து, ஜனனமரணப்பட்டுவந்த சிரமந்தீர்ந்துவிசிராந்தியடையும்பொருட்டு, அத்தனுகரணபுவனபோகங்களைமுதற்காரணத்திலொடுக்கி அச்சீவர்களையிளைப்பாறியிருக்கச் செய்தல். இம்மூன்றில் சிருஷ்டி ஸ்திதியிரண்டும் பிரபஞ்சத்தை நோக்கிநின்று, அதனையபிமானித்து, அதன்வசமாய்நின்றுசெய்யவேண்டிய தொழில்களாம். சங்காரமோ? அப்பிரபஞ்சநோக்கஞ்சிறிதுமின்றி, அபிமானிக்காது, அதனைக்கடந்துமேனின்றுசெய்யவேண்டிய தொழிலாம். ஆதலால் சிருஷ்டிஸ்திதிசெய்யும் பிரமவிஷ்ணுக்கள், பிரபஞ்சவசத்தர்களென்றும், சங்காரஞ்செய்யுமருத்திரரே, பிரபஞ்சாதீதரென்றுஞ் சொல்லப்படுவார்கள். பிரபஞ்சமோ? "யாவையுஞ் சூனியஞ்சத்தெதிர்" என்றபடி, தோன்றியொடுங்குந் தன்மைத்தாதலாற்பொய்யெனப்பட்டு மயக்கவியல்புடையதாய், அகங்காரமமகாராதிகளைவிளைவித்துஜனனமரணங்களுக் கிடமாயிருத்தலால், பிரபஞ்சவசத்தர்களாகியபிரமவிஷ்ணுக்களிருவரும், பிரபஞ்சப்பற்றொழிதற்குச் சாதகமாக இதனைப் பொய் யெனக்கண்டொழிதற்கிடமாகாமல், நேரேகண்டுபற்றிநிற்றற்குச்சாதகமாகும்படி இப்பிரபஞ்சத்தைஉள்ளதாகத்தோற்றுவித்தலும் காத்தலுமாகிய சிருஷ்டிஸ்திதிகளைச்செய்து, ஒவ்வொருகாலங்களிற் பொய்ப்போதங்கலக்கப்பெற்று, அகங்காரமமகாராதிகளைப்பொருந்தி,ஜனனமரணக் கிலேசங்களுட் படுவார்கள்.பிரபஞ்சாதீத ராகியருத்திரர்,

இப்பிரபஞ்சத்தைப் பொய்யெனக்கண்டு பற்றொழிந்து துச்சாதமாகச் சங்காரஞ்செய்து, எக்காலத்துமவ்விதத்துப் பொய்ப்போகஞ் சிறிதுமின்றி அகங்காரமமகாராதிலேசமுமின்றி, ஜனனமரணக்கிலேசக்கருக் குட்படாதிருப்பர் பிரபஞ்சவசத்தராகிய பிரமவிஷ்ணுக்கள், ஒவ்வோர்பிரகாரத்தால் சிவமாந்தன்மையுடையராவர். பிரபஞ்சாதீதராகிய ருத்திரர், சர்வப்பிரகாரத்தானுஞ் சிவமாந்தன்மையுடையராவர். ஆதலால், அப்பிரமவிஷ்ணுக்களைக்காட்டினும், சர்வப்பிரகாரத்தானுஞ் சிவமாந்தன்மையுடைய ருத்திரரே, பரமசிவனது அதிஷ்டானத்திற்குவிசேஷஉரிமையினையுடையராவர். அதனாலன்றோ அவ்வுருத்திரர், சிவசின்னங்களாகிய கங்கை, திங்கள், கொன்றை, கறைக்கண்டம் முக்கண், மான், மழு, வரதம், அபயமுதலியனவுமுடையராய்ச் சிவன், சங்கரன், அரன், மகாதேவன், முதலிய முதல்வனதுநாமங்களால் வழங்கப்பெற்றுச் சிவமேயாவர். பிரமவிஷ்ணுக்களோ? ஒவ்வொருகால், அகங்கார மமகாரவிகற்பங்களுட்பட்டு, தமக்கு முதல்வராகிய சிவபெருமானை மறந்து, தமது தொழில்களை இழப்பினும் இழப்பர். பின் சிவபெருமானால், நல்லறிவுணர்த்தப்பெற்று, உண்மை புணர்ந்து, சிவனருளால், தமது கிருத்தியங்களைச்செய்து இன்புறுவர். இதனாற் சிருஷ்டிதிதி கிருத்தியங்களும் சிவனருளை மறவாமல் எப்பொழுதும் வழிபட்டு நின்றால் மாத்திரம் அவர்க்கு உரியனவாகுமன்றி வேறில்லை யென்க.

இதுகாறுங்கூறிய முறையால், பிரமவிஷ்ணுக்கள்பிரபஞ்சவசத்தராய்நிற்றலால், ஒவ்வொருசமயம், அகங்காரமமகாராதிகளைக்கொள்வரென்பது தெளிவாம். இதனை, அவ்விருவரும், அகங்காரமேற்கொண்டு பிதாபுத்திரமரியாதை முதலியனமுழுதுங்கைவிட்டுமாறுபட்டு நின்றுசெய்தசெயலானுங் காணலாம். அதாவது, ஒருசிருஷ்டியாரம்பகாலத்திலே பிரமதேவர் உலகங்களைப்படைக்கநினைத்தனர். நினைத்தஅளவிலே, தேவமுனிவர்சித்தவித்தியாதர அசுரராக்ஷதாதி நரகமானுடாதி பசுபக்ஷிமிருக கிடதாவராதி சகலபிரபஞ்சங்களும் வகைவகையாக அதிவிஸ்தாரமாய்த்தோன்றியது. நானாவிதவிசித்திரரூபங்களாக நாம் நினைத்தமாத்திரத்திலேயுண்டாதற்குக்காரணம், பரமசிவன் நம்மிடத்து அந்தரியாமியாய்க் கலந்துவைத்தருளியசத்திமாத்திரையேயன்றி வேறில்லையென்பதறியாமல், அகங்காரவசத்தராய்த் தமதுவல்லபத்தால்நடந்ததாகக்கொண்டு, விஷ்ணுவை நோக்கிச்சமஸ்த பிரபஞ்சமும் படைக்கின்றகருத்தா நா

Koviloor Digital Library

னே; நான் படைத்த பிரபஞ்சத்தைநீ காக்கின்றாய்; நான்படைக்காவி ட்டாலெதைக்காப்பாய்; ருத்திரன் மன்மதனைத்தகிக்காமற்காத்துக் கொள்ள வலியற்றவனாறாய், காக்கின்றோமென்னுங் கொ்வத்தைவி ட்டுவிடு, விடாதொழிந்தாற்காவற்கடவுளாக வேறொருவரைப்படை த்துவைப்பேன்; நீபிருகுசாபத்தால் எடுத்த பிறவிகடோறும், உனக் குச் சரீரங்களையுண்டாக்கித்தந்தவனானல்லவா? என்றுகூற, விஷ்ணு மிகுந்த கோபமுடையராய் அடாபிரமனே, நீவந்தவழியுமறந்துவிட் டாயா? எனது உந்தியிற் பிறந்ததுண்டா இல்லையா? நீ, புத்திரனுத லாற் பொறுத்துக் கொள்வேனென்றெண்ணாதே, பித்தனுகியருத்தி ரன்உனது தலையை அரிந்தபொழுது, அதனைப்படைத்துக்கொள்ள வலியற்றவனாறாய், மச்சவுருவெடுத்து வேதங்களைப்பாதுகாத்துத்த ந்தேன், மதுகைடவர் முதலிய அசுரர்களைக்கொன்று உலகத்தைக்கா த்தேன், நானேகர்த்தாவன்றி வேறில்லை, நீ துஷ்டனுகினும் பெற்ற பிள்ளையாதலால் உன்னைக் கொல்ல மனந்துணியவில்லை, துணிந்தா ல் நீ ஒரு திருணப்பிராயமுமாகமாட்டா யென்று கூறினர்.

இப்படியே யிருவரு மாறுபட்டு உலகஞ்சகிக்கமுடியாத கோர யுத்தஞ்செய்தார்கள். அதனாற்பெருந்துன்பமுற்று இந்திராதியர் திரு க்கைலையடைந்து சிவபிரானைவணங்கி விண்ணப்பித்துமுறையிட்ட பொழுது ஆபத்சகாயராகியபரமசிவன்தாமே அவ்விருவரினும்மற் றெவரினுமேம்பட்ட அநாதிமுத்த சித்துருவாகிய பரமபதியென்னு முன்மையை உலகெலாமுணர்ந்துய்யும்படி அவ்விருவர்மத்தியில்அ க்கினிப்பிழம்பாகிய ஒருமலைவடிவாய் நின்றருளினர். அம்மலையோ! அண்டமுகட்டைக்கடந்து அதன்மேற் பெருவெளியையும் கடந்து அப்பாலைக்கப்பாலாய்ஆதிநடு அந்தமில்லாத சோதி மயமாய்வளர்ந்து நின்றது. உடனேஇருவரும் அணுகுதற்கஞ்சி, அதிதூரத்தேயொ துங்கித், திகைத்துநின்றார்கள். அவாங் மனோகோசரசிவசொரூபத் தைச், சிவஞானக் கண்ணுடையாரன்றி வேறுயாவரறியவல்லார். நா னேபிரமமென்று கங்கரித்தஅவ்விருவரும், தம்மாலளிக்கப்படாத அ ப்பிரமேயமாய் அத்தியாச்சரியமாய், அதிபயங்கரமாயொரு பொருள் தோன்றியபொழுதே, நாம் பிரமமல்ல, நமக்குமேலொரு பொருளு ண்டென்பதுதெரிசனமாய்நமதுமத்தியிற் காணப்பட்டதென்று அ டங்கிஅதனை வழிபட்டுணர்ந்துய்யவேண்டியதே புத்திமான்கள்மு றையாயிருக்க, அதை முற்றுங்கைவிட்டுத், தம்மைஇறுகப்பற்றிய அகங்காரவசத்தர்களாகவே நின்று, இந்த அக்கினிப்பிழம்பின்அடி

முடிகளை நம்மிருவரில் யார்காண்பாரோ அவர்களேகர்த்தாவென்று பிரதிஞ்ஞை செய்துகொண்டு காணப்புகுந்தார்கள். அவரில்மூவுலகளந்த திரிவிக்கிரமராகிய விஷ்ணுமூர்த்தி அம்மலையினடியைக் காண வேண்டிப்பன்றிருபியாய் ஒருகணத்துக்குஆயிரகாததூரமாகப் பூமியைத் துளைத்துச்சென்று, கீழுள்ள ஏழுலகங்களையும் அப்பாலுள்ள ஆடகேசுரபுவனாதிகளையுங்கடந்து நூறாண்டு கழிந்தும், மலையினடியைக் காணாமல், முகநுனியுங் கொம்புகளுங் குளம்புகளுந்தேய்ந்துவருந்திமேற்செல்லும்வழி தூர்ந்தசமயம், ஆ! ஆ! இதுநம்மின் மேலான துரியசிவபிரானது சோதிரூபமேயாகுமென்று தெளிந்து அந்நிலையிலே ஸ்ரீபஞ்சாக்ஷரசெபதியான ஸ்தோத்திராதிகள்செய்து, அதனால்இளைப்புஞ் சலிப்புமொழிந்துவருத்தம் நீங்கி .மேற்சென்று பூமியில்வந்து, சோதிசொரூபராகிய பரமசிவனைப் பலமுறைபணிந்து துதித்து நின்றனர்.

முன்முடியைத் தேடத்தொடங்கிய பிரமா, அன்னப்பக்ஷிவடிவினராய், அரைக்கணத்துக்குஆயிரகாத தூரமாகப் பறந்து நூறாயிரவருடம் மேற்சென்றும் காணப் பெறாது, சிறகெல்லாமுதிர்ந்து வேகந்தவிர்ந்துதுன்பமிகுந்து மேற்செல்லமாட்டாது இளைத்துநின்று, இது எமக்குமேலான துரியசிவனது செயலென்றறிந்து, விஷ்ணுவோடு உறவுபாராட்டினேனில்லையே, இனிஅவர் முன்என்னசொல்வது, முடிகண்டேனென்றுபொய் சொல்லவும் சாக்ஷியில்லையேயென்று நினைத்துநிற்கும்பொழுது, மேலிருந்து தாழம்பூவொன்றுநேர்வரக்கண்டு, நீ இங்குவரக்காரணமென்னென்றுகேட்கப், பரமசிவமுடியினின்றும்நழுவப்பட்டேன், நாற்பதினாயிரவருடங்கழிந்தது; கழிந்துந்தங்குமிடங் கிடைக்கவில்லையென்றுசொல்ல, உடனேபிரமா, முன்னிகழ்ந்ததைச்சொல்லி, நான்சிவமுடியைக் கண்டதாக நீ சாக்ஷி சொல்லவேண்டுமென்றிணக்கி, அப்பூவுடன்பூமியில்வந்து விஷ்ணுவைப்பார்த்து நான் ஒருகணத்துக்கு நூறுபிரகாதம் மேற்சென்று, இந்த அக்கினிமலையின்முடி கண்டுவந்தேனென்று சொல்லக், தாழம்பூவும் அது உள்ளதுதானென்றுசாக்ஷி சொல்லியது.

பிரமா, நாம் அகந்தைகொண்டதற்கே இந்தக் கதியாயிற்றே; இனிப்பொய்யுஞ் சொன்னால் என்னவருமோவென்றஞ்சி உண்மை கூறிவழிபட்டுப்பணியாமல், தாழம்பூவையுமுடன்சேர்த்து இப்பெரும் பொய்சொன்ன அளவிலே, உலகெலாம்நடுங்கப் பெருஞ்சத்தத்துடன் அக்கினிமலைவெடித்தது; அந்தவெடிப்பினின்றும் பரமசிவன்

Koviloor Digital Library

தோன்றி யருளினர். பாபிகளுக்குக் கோரரூபங்காட்டித் தண்டித்துத்திருத்துதலும், புண்ணியர்களுக்குச் சாந்தரூபங் காட்டியாட்கொள்ளுதலுமியல்பாகவுள்ள கிருபாநிதியாகிய பரமசிவன், விஷ்ணுமூர்த்திநானேபிரமமென் றகந்தைகொண்டாலும், உண்மைகண்ட மாத்திரத்தில் அகந்தையொழிந்தசிறுகுற்றத்தினராதலால், அவர்வந்துவணங்கியஞ்சிநின்றதுகண்டு கோபங்கொள்ளாதொழிந்தனர்பிரமாவோ? நானேபிரமமென்ற அகந்தமாத்திரமன்றி மேற்பறந்துசென்றிளைத்தசமயம் உண்மைபுணர்ந்து, நமக்குமேல் துரியமூர்த்தியின்செயலேயீதுவென்றுதெளிந்தும் பொய்சொன்னாற்கேடு வருமேயென்றஞ்சாது, பூவையும்பொய்சொல்லச்செய்து, செய்தல் செய்வித்தலாகிய இருவழியுங் குற்றவாளியாய், இந்தத் தூர்க்கதியிலாவது சிவனைவணங்கி யுய்வோமென் றெண்ணாதொழிந்தமகாபராதியானபடியால், அப்பெருங்குற்றம், தமதியல்புக்கு விரோதமாதலால், அதனைத்தமது திருவுள்ளத்திற்றங்குதற்கிடங்கொடாது, அந்தநிமிஷமேயொழிக்குந், தமது அதிபரமப்பதவியெல்லைப்பாதுகாக்கக் திருவுளங் கொண்டோ? பொய் கூறியதற்குச் சிக்ஷிக்காவிட்டாற் பொய்சொல்லுதல் சொல்லுவித்தல்போன்றஇழிவினதாகிய உடன்படுதல்தம்பால்வந்துசாருமாதலால், அது சாராமைப்பொருட்டோ? விஷ்ணுமூர்த்தி, பிரமன்சொல்லைநம்பாமல்மேலும் வினாவினால் அப்போதுபிரமன் அதைநிறுத்துதற்குமேலும் பலபொய்சொல்லிமுழுதுங் கெட்டுப்போவானென்று திருவுள்ளமிரங்கியோ, மேலும்பல பொய்சொல்வானேல் அதுஉடனேபரிகரிக்கப்படாவிடில்தமதுசந்நிதிபொய்யின்தோற்றத்திற்கிடமாயதென்னும்பழிமொழி வருமாதலால் அதுவாராதுபாதுகாக்கவெண்ணியோ பிரமன்முடிகண்டேனென்றதை, விஷ்ணுமூர்த்திநம்பிமானத்தால்வருந்துவரென்றெண்ணிப்பிரமனினுந்தமக்குமிக அணுக்கராகிய அவ்விஷ்ணுவைப்பாதுகாக்கவெண்ணியோ? மெய்ஞ்ஞானக்கினிபர்வதரூபமெய்ப்பொருளாகியதமக்குமுன்னே, அஞ்ஞானகாரிய அசத்தியமாகியபொய்நிலைபெறாது அந்தநிமிஷமே தொலைந்து விடுமென்னுந்தமது சொபாவகுணத்தாலோ? இன்னும்யாதுகாரணத்தாலோ? சிவபெருமான், தமதுபரஞ்சோதிரூபஞானக்கினிபர்வதம்வெடித்ததென்றுகாட்டி, அதனைத்தமது திவ்வியரூபந்தோன்றுதற்கிடமாகக்கொண்டருளினர். அங்ஙனந்தோன்றியருளியபரமசிவன், பிரமனே நீகூறியது நன்றுநன்றென்றுநகைத்தருளினர். உடனேயண்டங்களெல்லாம்நடுங்கின. சூரியச

Koviloor Digital Library

ந்திராதிஒளிமழுங்கின. அப்போதுபிரமாதொலைந்தாரென்றுதேவர்கள்பயந்தார்கள். புட்பமாரிபொழிந்தார்கள். முந்தியேவழிபட்டுத்திருந்தியவிஷ்ணுமூர்த்தி மகிழ்ந்துதுதித்துப்பரவசராய்க்கூத்தாடினார். அவர்க்குப்பரமசிவன் அனேகவரங்களைக்கொடுத்துப்பிரமனை, உனக்குலகத்திலே கோயிலும்பூசையுமில்லாதொழிகவென்றும், தாழம்பூவேயுன்னைநாமினித்தீண்டிலேமென்றும் முனிந்துரைத்தருளினர். உடனேபிரமாநடுநடுக்கமுற்று, ஸ்ரீபாதங்களில்விழுந்துவணங்கிப்பலவாறுதுதித்துப்பிரார்த்தித்தனர், அவரது அகந்தையாகியபுல்லைச்சாம்பராக்கத்திருவுளங்கொண்ட அவ்வளவன்றிவேறில்லையாதலால், தாம் அக்கினிபர்வதமாயிருந்தும் அதன்வெப்பத்தால்வேறெவர்க்கும் யாதொருதுன்பமும்வாராதொழியநின்றருளியபரமசிவன், பிரமாவைநோக்கிப், பூமியிலே வேதியர்க்குச் செய்யும்பூசையுனக்குச்செய்ததாகுகவென்றருளிச்செய்துபற்பலவரங்கொடுத்தருளினர். அப்போது பிரமவிஷ்ணுக்களிருவரும், சுவாமீ, நாங்களும் மற்றுந்தேவர்களும் இந்தஅக்கினிமலையின் அபரிமிதபரஞ்சோதிக்கெதிரேநின்று, கண்களைத்திறக்கமுடியவில்லை. இச்சோதியையுள்ளடக்கிமலையாயிருக்கும்படிசெய்தருளுகவென்றுவேண்டப், பரமசிவன் அப்படியேசெய்தருளினர். இதுவே, மேற்காட்டியபடி அருணசலமான்மியத்தில்பிரமவிஷ்ணுக்கள், அடிமுடிதேடியகந்தைநீங்கி உண்மைதெளிந்துவணங்கியதனால் அவர்க்கும் மற்றெவர்க்கும்பரமபதிபரமசிவனேயென்றுவிளக்கியசரித்திரச்சுருக்கமாகும்.

இனி, மேலேபிரமதேவர், இச்சரித்திரவிளக்கஞ்சுருக்கிக்காட்டிப்பரமசிவனேயாவருக்கும்மேலானவனென்றுகூறியது கேட்ட தக்கன்பிரமாவைநோக்கி, ஐய, சிருஷ்டிஸ்திதிசங்காரமென்னும்மூன்றில், முற்பட்டஇரண்டுதொழில் செய்கின்ற பிரமவிஷ்ணுக்களாகியநீங்களிருவரும் அந்நியர்களாக, உங்களுக்குப் பின்னர்ஒருதொழில் மாத்திரஞ்செய்கின்ற ஈசன், உங்களுக்கு மேலானதலைவனென்றுகொள்ளுதற்குக்காரணமென்னை? மயக்கநீங்கக் கூறுகவென்றுதற்புகழ்ச்சிப்பிரியனுரைத்தான். பரமசிவனருள்பெற்று அப்பரமசிவசொரூபநிலைமைநன்குதெளிந்தபிரமதேவர், அவனை நோக்கித், தக்கனே! முன்பு நம்மிடத்துவேதங்களைக் கசடறக்கற்றுஅவற்றுள்ளேஉபசாரமென்றெடுக்கவேண்டியபொருள்களைபொதுக்கி அதிவிசிஷ்டமாய், யாதொருகளங்கமுமின்றிப்பரிசுத்தமாயுள்ளநன்மை

Koviloor Digital Library

ப்பொருளிது வென்றுதெளிந்துகொண்டது இத்தானோ? நன்று நன்றென்றுநகைத்து, நீ பிரமவிஷ்ணுக்களாகிய எங்களிருவர்தொழிலை முற்பட்டனவென்றும், சங்காரத்தொழிலைப்பிற்பட்டதென்றும், பிற்பட்டதொழில் செய்கின்றவனை உங்களுக்குத்தலைவனென்றுகூறுவதெப்படியென்றுங்கூறிய இதனால், உன்கருத்துநீ மூன்றாவதாகக்கொண்டசங்காரத் தொழில்செய்கின்றருத்திரமூர்த்தியைக்காட்டிலும் அதற்குமுந்திய இரண்டாவதாகிய ஸ்திதித்தொழில் செய்கின்றவிஷ்ணுவுயர்ந்தவரென்றும், அவரைக்காட்டிலும் அதற்குமுந்திய முதலாவதாகியசிருஷ்டியைச்செய்கின்றநான் உயர்ந்தவனென்றுங்கொண்டு, அவ்வுயர்வு என்புத்திரனாகிய உன்னிடத்தில்வந்து முடிவிலெய்துமென்றெண்ணியதற்புகழ்ச்சிக்கருத்தேயன்றி வேறில்லை. நன்று நன்று! இதனால் உன் அறியாமையின்விசேடம் விளக்கமானது. எவரினுமேலான அளவிலாற்றலுடையவனன்றோ! சர்வசங்காரவல்லவனாவான்; ஆதலாற்சங்கரிக்கின்றவனென்ற அந்தவொருசொன்மாத்திரையேகொண்டு, வேறுபிரமாணங்கள்வேண்டாது, அவனே எவர்க்குந்தலைவனென்றுதெளிந்துகோடலேதுணிவாயிருக்க. அதனைச்சிறிதும் நோக்காமல், தற்புகழ்ச்சிவசப்பட்டு நின்று இவ்வாறு கூறினாய்; அதனைமுற்றும்விட்டு, இனியேனும் நாம் கூறுகின்ற உண்மையையுற்றுக் கேட்பாயாக. நீ, பிற்பட்டதொழிலினனென்று லாகவமாகக்கூறிய பரமசிவனே, முற்பட்டனவென் றுயர்த்திக்கருதிய சிருஷ்டி ஸ்திதிசெய்கின்ற எங்களிருவரையும் மற்றெல்லாரையும், முடிவில்தனுகரணாதிகளையொழித்துமுன்புதோற்றிய முறையேயொடுக்கிக்கொள்ளுதலாகிய சங்காரத்தைச் செய்கின்றவனென்னும்உண்மைதெளிவாயாக. ஒடுக்கினவனெவனோ? அவனேமீட்டும்வெளிவரச்செய்தாலன்றிவேறிடையுமா? எல்லாமொடுங்கியகாலத்து அவனையன்றிவேறெவரேனும் ஆங்குளாரா? ஆதலால், எங்களை முதலிய எல்லாரையும், முன்னொடுக்கிய முறையே மீட்டுந்தனுகரணாதிகளைத்தந்துவெளிவரச்செய்து, கர்மானுபவங்களையூட்டிக்காக்கின்ற§ சிருஷ்டிஸ்திதிகர்த்தாவும் அவனேயாமென்பதுதெளிவாயாக

§ சங்காரகர்த்தாவாகியபரமசிவனிடத்திலே, சிருஷ்டிஸ்திதிகளுமுண்டென்பதனை, இருக்குவேதம் (க0) மண்டலம் (கஉக) சூக்தம் (சு) மந்திரம், (அரிப்பிரமேந்திராதி) தேவர்கள் உலகசிருஷ்டிக்குப் பின்னேதானுளராயினார்கள். அங்ஙனமாயின், அது (அச்சிருஷ்டி) எங்கிருந்து உளதாயிற்றென்று யார் அறிவார்? என்று வினாவி, அடுத்த (எ) (கஉக) (எ) மந்திரம் 'பரமவியோமமாகியதிருச்சிற்றம்பலத்தின், [illegible], எவர், பிரபஞ்சத்துக்

Koviloor Digital Library

சர்வசங்காரஞ்செய்கின்ற அக்காலத்திலே தான் ஒருவனேயாகிச், சர்வாத்மாக்களையும், முன்புதன்னிடத்திலின்று வெளிவந்தமுறைப்படியே ஒடுக்கித், (தான் வேறொன்றில் ஒடுங்காததலைவனென்று விளங்குந்தன்னிலை வேறுபடாமல் என்றும் ஒரேபடித்தாய்) நிலைபெற்று நின்று, மீட்டுஞ்சர்வான்மாக்களுக்கும் அம்மையப்பனாய்த் தநுகரணபுவனபோகங்களைக்கொடுத்தருளுகின்ற, †முக்கண் எந்தையாகிய பரமசிவனுடைய அளவுப்படாத செய்கைமுழுதும், இத்தன்மைத்தென்று எவராலுங்கூறும் பகுதியினதன்றென்க.

ஆதலால், ஒடுக்கியபடியே வெளிவரச்செய்கின்ற சிருஷ்டிக்கிரமத்தானேப்படியேயன்னையாகில், விஷ்ணுமூர்த்தியையும், என்னையும், தமது இரண்டு திருத்தோள்களினின்றுந் தோற்றுவித்து, (மூலப்பிரகிருதியின் பாற்பட்ட) புவனங்களெல்லாவற்றையுங் காத்தலும் படைத்தலுமாகிய அதிகாரங்களை யெங்களுக்குத்தந்து, (எனக்குமேல் மேலுள்ள அசுத்தமாயை சுத்தமாயைகளை நோக்கமிகக்குறைந்ததாகிய பிரகிருதி புவனங்களைக் காத்தல் - படைத்தலைச் செய்தற்குங்கூட நாங்கள் சுவயம் வல்லபமில்லேமாதலால் எங்களுக்கு அவ்வல்லபமுண்டாகும்படி) உங்களிடத்தில் நாமும் இருப்போமென்று கூறி, எங்கள் உயிருள்ளே நின்று (அப்பரமசிவனே அவ்விரண்டு தொழில்களும்) நடத்துகின்றான். (இது

கு அத்தியக்ஷராய் (அதிபதியாய்) நின்றாரோ அவரே அதனை அறிவார்" என்னுமிடைகூறுதலாலும், அந்த அதிபதி இன்னாரென்பதைப்பிருகதாரணியோபநிடதம் கூறுவது) விதாகாச இருதயத்துள்ளே (பரம) ஆகாசமாய் (திருச்சிற்றம்பலமாய்) இருக்கின்றதோ? அதில் அனைத்தையும் வசீகரிப்பவரும், அனைத்திற்கும் அதிபதியும், அனைத்திற்கும் ஈசானருமாயுள்ளவர் அமர்கின்றார். "என்று ஈசானப்போால் விளக்குதலாலும்," மிகவுந்தெளிவிக்கப்பால ஈசானரைத் தெரிவிக்கும். அந்தப்பிரமவிஷ்ணுருத்திரேந்திரர்களாதியனைவரெல்லாம் (அந்த ஈசானரிடமாகவே) உற்பத்தியாகின்றனர். எல்லா இந்திரியங்களுடனேகூட (உற்பத்தியாகின்றன) காரணமும் காரணங்களைப் படைத்தோரும் (சிருஷ்டிதிதியாதிகர்த்தர்களென்றுபசரிக்கப்பட்ட பிரம விஷ்ணுவாதியவரைச் சிருஷ்டித்தோரும்) கருத்தோருமாகிய ஈசானர் உற்பவித்தல் இல்லை. என்று அதர்வசிகோபநிடதங்கூறுதலாலும், மற்றும்பற்பலசுருதிகளாலும், உள்ளபடி தெளியலாம்.

†முக்கண் என்ற விசேஷணமும் சிருஷ்டிதிதிசங்காரமாகிய முத்தொழிற்கும் அப்பரமசிவனே கர்த்தாவென்பதைக் குறிப்பாலுணர்த்தும்.

Koviloor Digital Library

வே யுண்மை. இதுவன்றி) எங்களாலாகத்தக்க செயல் யாதொன்றுமில்லை. எங்களுயிருள்ளே அந்தர்யாமியாய் நின்று எங்களிடத்துவைத்த சிருஷ்டி ஸ்திதி அதிகாரத்தைச்செய்தல் மாத்திரமோ, எங்கள் தியான தெரிசனங்களுக்கிசைய எங்கள் சிந்தையினிடத்தும், கண்களினிடத்துமிருந்து, எங்கள் பரிபாகவியல்பின் முறைப்படி வழுவாமற் பாதுகாத்தருள்பவரும் அப்பரமசிவனே. அவர் அங்ஙனம் எங்களிடத்தில் நீக்கமின்றி வீற்றிருந்தருளுதலால் திரிகுண வசப்பட்ட நாங்கள், ஒவ்வொரு காலங்களில் மயங்கி யகந்தையுறும்பொழுது எங்களிடத்தில் வெளிப்பட்டுவந்து அம்மயக்க நீக்கி யுண்மை யுபதேசித்தருளுவர். அதுவுமன்றித் தாமும் சங்காரகிருத்தியத்தைச் செய்கின்றவர்போல, எங்களோடு உடன்வைத்தெண்ணும்படி தாமுமொரு மூர்த்தியாய் நின்றும் அவர், எள்ளில் எண்ணெய், மணியிலோசை. பூவில்மண முதலியனபோலத் தாமொருவரே உலகமெங்கும் உள்ளும் புறம்புமாய் நீக்கமின்றி வியாபித்து நின்றருளுவர்.

வேதமுதலாகிய சமஸ்த சாத்திரங்களையும், வெளியிட்டருளிய அவரே யெங்களுக்கு உபதேசித்தருள, அவ்வுபதேச பலத்தால் அவற்றையுள்ளபடி யுணர்ந்தோம். இதனை நீ அந்நூல்களிற் காண்பாயாக. இவ்வுண்மையுணராது அவரையும் எங்களுடன் வைத்து எங்களில் ஒருவராகக்கொண்டாய். இதனால், நீ, பெரும் பேதைபோலுமென்று பிரமதேவர் கூறக்கேட்ட தக்கன், பிதாவே, நீர் சொல்லியபடி பரமசிவனால் வெளியிடப்பட்ட வேதம், பூதங்களையும், உயிர்களோடு மற்றெவரையும், பிரமமென்று கூறுவதென்ன, உண்மையை விளக்கியருளுகவென்று வேண்டிக்கொண்டான். அவனைநோக்கிப் பிரமதேவர் நீ எவராலும் தெளியப்படாதது நினைத்தற்கும் அரியதென்று இதனை யுணர்ந்துகொள்ளும்படி கேட்டனை; அவ்வேதங்களின் முடிந்த உண்மையைக் கேட்பாயாக. அவ்வேதங்கள் பற்பல இடங்களிற் பற்பலரையும் கூறினும், எல்லார்க்கும் முதல்வனாய், எக்காலத்தும் முடிவில்லாத அநாதி நித்தியனாகிய பரமசிவனைக் குறித்துப், பிரமமென்று எவ்வெவ்விடங்களிற் சொல்லப்படுகின்றனவோ அவையெல்லாம் நிருபசரிதமாகிய உண்மையேயாய் நிலைபெறும். மற்றையரைக் குறித்துச்சொல்லப்படுவனவெல்லாம் உபசரிதமாய் முடிவிற் பொய்யாயொழியும்.

ஆதலால் அப்பரமசிவனையல்லாத மற்றைத்தேவர் முதலிய சீவர்களுக்கும், பஞ்சபூதாதிகட்கும், அவ்வேதம் ஆங்காங்கு உயர்வு கூறுதல் உபசாரமேயன்றி வேறில்லை. அவ்வுபசார வழக்கும் தவறல்ல. ஒரு பொருளைப் புகழவேண்டுமேயானால், அதனை அதற்குரிய அளவின்றி மேலாக எடுத்துப்பேசிக் கொண்டாடுதல் உலக வழக்கமே. இந்தப் பூமியிலே வேதங்களை யுணர்ந்து கரைகண்ட பிராமணரை இவர் பிரமதேவரென்று கூறுகின்றார்களல்லவா! இது உண்மையாகுமா? உண்மையென்றால் அப்பிராமணர்கள் என்னைப்போலச் சிருஷ்டி கிருத்தியம்முதலிய அருஞ்செயல்கள் செய்ய வல்லுநராவரா? அது எப்படி உபசாரமாமொழியுமோ? அதுபோலப், பரமசிவனொருவனுக்கே யுரிய பிரமவாசகம், மற்றெவர்க்கும் எவைக்குஞ் சொல்லுமிடத்து அது உபசார வழக்கென்பதே நிச்சயம். அப்படி உபசாரமாகத் தான் கூறுவானேன் என்றால், வேதங்களைக் கரைகண்ட அவ்வாயினதாகிய ஏகதேச ஒற்றுமை நோக்கிப் பிராமணரைப் பிரமா என்று சொல்லுதல்போலப் பரமசிவன் சம்பந்தமான தேவர், முனிவர், மற்றுஞ்சீவர் முதலிய சர்வான்மாக்களிடத்துங் கலந்து நிறைந்திருக்கின்ற †அந்தர்யாமித்துவ ஒற்றுமை நோக்கி வேதங்கள் மற்றையோரையும் பிரமமென்றுகூறுவனவேயன்றி உண்மையல்ல.

இனி, உலகத்தில் எந்தப் பொருளை யார் வணங்கினாலும் அந்த நமஸ்காரம் முக்கண் முதல்வனாகிய பரமசிவனிடமே போய்ச் சேரும். அதனாலன்றோ அப்பரமசிவன் நமஸ்சேஷியென்று அவ்வேதங்களால் விதந்தெடுத்தோதப் பெறுகின்றான். ‡எந்த நமஸ்காரமும் அவனிடமே சேருகின்றன அதுபோல அவ்வேதங்களில்,

† சர்வான்மாக்களிடத்தும் பரமசிவனொருவனே அந்தரியாமியாயுள்ளவன் என்பதை "அவர் உன் ஆன்மா அந்தரியாமி அமிர்தம்" என்றும் பிருகதாரணியோபநிடதத்தாலும், "எவர்ருத்திரரோ அவர் பகவான் அவர் பிரமா அவர் பூ: புவ:, ஸுவ: அவர்க்கு நமஸ்காரம் நமஸ்காரம்" என்பனவாதியால் பிரமா விஷ்ணு ருத்திரர் உமை இலக்குமி சரஸ்வதி கணேசர் ஸ்கந்தர் இந்திராதி லோகபாலர் பூமியாதி சப்தலோகங்கள் பிருதிவியாதி பஞ்சபூதங்கள் சூரிய சந்திராதி எல்லா இடங்களிலும் அந்தரியாமியாயுள்ளவர் பரமசிவனேயென்று விளக்குகின்ற அதர்வசிரசு முதலிய உபநிடதங்களாலும் காணலாம்.

‡ நமஸ்காரமெல்லாம் பரமசிவனையே சேருதலையும், அப்பரமசிவனால் நமஸ்கரிக்கப் பெறுவோராய் அவரின் மேலானவரொருவருமில்லை யென்ப

Koviloor Digital Library

ஆங்காங்குப் பிறரைக்குறித்துப் புகழ்கின்றனவெல்லாம் சர்வலோக நாயகனாகிய பரமசிவனையே சேருமன்றி வேறில்லை. அது, எல்லா நதிகளும் சமுத்திரத்தையே போய்ச்சேருதல் போலென்க.

தக்கனே இன்னுங்கேட்பாயாக. வேதசாகைகளெல்லாம், எங்களால் உறுதியாகக் கூறப்படுகின்ற சத்திய வசனங்களிவையென்று கூறுகின்றன. அவையாவன, பிரபஞ்சங்கள் எல்லாவற்றையும் படைத்துக், கருமபோகங்களை அநுபவிக்கச்செய்துகாத்து, இளைப்பாறியிருக்கும்படி ஒடுக்கி, மேலுங்கரும சேஷமிருத்தலால் சேஷமில்லாமல் முழுதும் அநுபவிப்பித்தொழித்துப் பேரின்பமுறும்பொருட்டு மீளவும் படைக்கின்றவனும்; சேதனப் பிரபஞ்சமாகிய ஜீவர்களுக்கு அருள்செய்து அவர்களை அடிமையாகவும் அசேதனப்பிரபஞ்சமாகிய தனுகரணாதிகளை உடைமை யாகவுங்கொண்டு ஆளுகின்ற தலைவனும், ஆதிமத்தியாந்த ரகிதனும், சர்வலோகத்துக்கும் மாதாபிதாவும், பகவந்நாம யதார்த்த சொரூபனும், அருவமும் உருவமும் அருவுருவமுமாகி விளங்குகின்ற பரிசுத்தனும், எவர்களாலும் இன்னதன்மையனென் றறியமுடியாத சுயம்பிரகாச சொரூபனும், எங்கும்நிறைந்த பரிபூரணசித்தனும், அநாதியாயுள்ளவனும்,

---

தையும், "செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக், கையானை" என்னும் ஸ்ரீவாசக சுருதியாலும், இன்னார்க்குத்தான் உரியதென்பதின்றி எல்லார்க்கும் பொதுவாயுள்ள, பாதநூலும் பிரமவிஷ்ணுவாதி தேவர்களை அவரவருடைய சக்கர கமண்டலாதிகளைக் காட்டும் அபிநயங்களால் விளக்கிப், பரமசிவனையும் அதுபோலச் சூலமுதலியவற்றால் விளக்காமல் நமஸ்காரத்தால் விளக்குதலாலுந் தெரியலாம். இதனை அரதத்தசிவாசாரியர் விளக்கிக்காட்டியருளினர். இவர், விஷ்ணுமூர்த்தியே. அஃதெப்படியெனிற் கூறுதும். விஷ்ணுமூர்த்தி திரிபுரத்தசுரர் செய்யுந்தன்பஞ் சகிக்காமற் பரமசிவனை வணங்கித்துதிக்க, அவர் நம்மைப் பூசிக்கின்ற அவ்வசுரரை நாமே கொல்வது முறையல்லவென்றருள, இதற்குபாய மென்னென்று வஞ்சனையோசனைசெய்து, தாமே ஒரு புத்தகுருவேஷங்கொண்டு சிடாாக நாரதரை அழைத்துச்சென்று, அத்திரிபுரத்தவர்களுக்குப் புத்தசமயமே மெய்யென்று போதித்துச் சிவசமயத்தைமாற்றின சிவத்துரோகத்துக்குப் பரிகாரமாகச் சிவாஞ்ஞையால் இப்பூமியிலே சோழநாட்டினுள்ள கஞ்சனூரிலே வாசுதேவஅய்யங்காருக்குப் புத்திரராய்ச் சுதரிசனரென்று நாமகரணஞ் செய்யப்பெற்று வாழும் அதிபாலியத்திலேயே, சிவபக்தர்களைக் கண்டளவிலே பாதத்தில் விழுந்து வணங்கி அவர்கள் திருவடிப்புழுதி சிரமேற்கொண்டு விபூதி ருத்திராக்ஷ தாரணராய் விளங்குதலைக்கண்டு, அய்யங்கார் சகிக்காது

Koviloor Digital Library

தேவாதிதேவனும், ஏனையோர்போலப் பிறப்பிறப்பாதிகட்குட்படா
மல் ஒரேபடித்தாய் என்றும் நித்தியனாயுள்ளவனும், சர்வான்மாக்க
ளிடத்தும் நீங்காத அநவரத நிருத்தஞ் செய்பவனும், திரிலோகங்
களிலுந்தோன்றுகிற எல்லாப் பொருள்களையும் தோற்றுவித்தருள்
கின்ற பிதாவாகிய திரியம்பகனும், சர்வான்மாக்களிடத்தும் சாக்ஷி
யாய் நின்றருள்பவனும், எக்காலத்தும் எவ்விதத்தும் அசைவற்ற
தாணுவும், பரமனும், தன்னிலும் உயர்ந்தவர் ஒத்தவர் ஒருவருமி
ல்லாத மேன்மைவாய்ந்த பெருமையிற் சிறந்து விளங்குகின்ற ஏக
வஸ்துவாயுள்ளவனும், எவர்களாலும் அளவிடுதற்கரிய அஷ்டமஹ
கா திவ்யகுணத்தையுடையவனும், பிரம விஷ்ணுவாதி எவர்களா
லுங் காணமுடியாதவனும், ஆண் பெண் அலி என்னும் பான்மையி
ல்லாதவனும், யாவரும் எண்ணிய எண்ணியபடியே கொடுத்தருள்
பவனும், பிரமவிஷ்ணுவாதி சகலதேவர்களுக்கும் கா[illegible]வனை

மிக்க வன்கண்மை செய்து அன்னபானாதிகொடாமல் துரத்திவிட அந்த
ண அக்கினிசாலையத்தையடைந்து பரமசிவ பாதங்களை இறுகப்பற்றித்
துதித்த அளவிலே, பரமசிவன் வெளிவந்து சிவதீக்ஷைசெய்து சிவலிங்கங்
கொடுத்துப் பூசித்து வரச்செய்து, உடனே சொர்ணபாத்திரத்திலே பாயசா
ன்னங் கொடுத்தருள உண்டருளி அய்யங்காரிடஞ்சென்று, நீர் சுருதியாதி
தக்க பிரமாணத்துடன் விஷ்ணுபரத்துவ நிருபணஞ்செய்தால் நான் அவ்வ
ழியில் வருகிறேன். அல்லது நான் சிவபரத்துவ நிருபணஞ் செய்கிறேன்
நீர் அவ்வழியில் வருக என்று கூறியருள, அய்யங்கார் ஸ்ரீ வரதராஜப்பெ
ருமாள் சந்நிதியில் பழுக்கக் காய்ச்சிய இருப்புப்பீடத்தில் இருந்துகொண்டு
சிவபரத்துவ நிருபணஞ்செய், நாங்கள் சைவநெறியில் வருகிறோமென்று
கூற, அப்படியே வரதராஜப்பெருமாளுக்கும் கருடாழ்வாருக்கும் மத்தியில்,
சிவந்து சுவாலிக்கக் காய்ச்சிய இருப்புப்பீடத்தில் இருந்துகொண்டு, "காய
த்திரி வல்லபத்தவாத்" என்பது முதலிய ஐந்து சுலோகங்களில் (௨௨) எ
துக்கள்காட்டிச் சிவபரத்துவ நிருபணஞ்செய்தருள, உடனே பிதாமுதலாக
அப்புரியுள்ள வைஷ்ணவர்களெல்லாரும் அவர் பாதங்களில் விழுந்து
வணங்கி விபூதிருத்திராக்ஷதாரண சைவசிரேஷ்டரானார்கள். பின்பு பிதா
வானவர் ஸ்ரீ ஞானசம்பந்தர் பிதாவைப்போலவே அரதத்தரைத்தமது தோளி
லே தாங்கிச் சென்றும் பெரும்பாக்கியம்பெற்றார். அரதத்தர் மற்றை நகரங்
களெங்குஞ்சென்று அங்குள்ள வைஷ்ணவர்களை நோக்கி ஐயா! ஒரு புரு
ஷனுடைய தொண்டர்களுள்ளே மிகச்சிறுவடிவுள்ள ஒரு தொண்டன்
சமுத்திரத்தைத் தன் உள்ளங்கையுள்ளடக்கி ஆசமித்துவிட்டான், மற்றொ
ரு புருஷன் தானே பெரு பிரயாசையுடன் அனேக பலவான்கள் துணையு
டன்கொண்டு கடலில் ஒரு பெரிய வீதியளவு இடத்தில் அணைபோட்டு அதை

Koviloor Digital Library

டாதியாய் அருள்செய்கின்ற அநாதிமலமுத்த பசுபதியும், அப்பிரம விஷ்ணுவாதி சமஸ்த தேவருக்கும் மேலான மகாதேவன் தான் ஒருவனேயென்பதை யாவருந் தெரிந்துய்யும்படி அத்தேவரெல்லாம் அவரவர் கால எல்லையில் இறந்தொழிய அவ்வுடல்கள் வெந்த சாம்பல் எலும்புகளையும் அணிந்து தனது விருப்பு வெறுப்பின்மையாதி பதித்துவ லக்ஷணம் விளக்குகின்றவனும், சரீரிகளாகிய சமஸ்த சீவர்களையும் தனது உத்தம குணத்திலொடுக்கி அவர்க்கெல்லாம் பற்றுக்கோடாய்நின்று அச்சீவர்களது குணம் லேசமும் தன்னிடத்துப்புகப்பெறாதவனும், தன்னுடைய சொரூபலக்ஷணம் இன்னதன்மையதென்று என்றும் எவராலும் சொல்லமுடியாத மகாதேவனும், ஈசாநாமவாச்சியபூதனும் பரமசிவனொருவனேயென்று விதந்தெடுத்துக் கூறுவனவாம்.

தக்கனே, ஈண்டு இவ்வேதங்களெல்லாம் உறுதியாகக் கூறிய சத்திய வசனங்கள் பற்பலவுமன்றியும், இனி முடிவாகக்கூறும்வசனமும் ஒன்றுகேட்பாயாக. அஃதாவது, அவ்வேதம் மேலும்பிறந்திறவா நித்தியானந்தப் பெருவாழ்வாகிய பரமுத்தியை ஒருவர் வேண்டினால், அதனைக்கொடுத்தருளுகின்ற மோக்ஷதாதா இன்னாரென்று கூறுமிடத்துப், பிரம விஷ்ணுவாதி சமஸ்த தேவர்களையும் ஒதுக்கிவிட்டு ஒப்பற்ற தனிமுதற் பரம்பொருளாகிப் பரமசிவனே அதனைக் கொடுத்தருளுகின்ற மோக்ஷதாதா என்று விதந்தெடுத்துக் கூறுமானால், அம்மகாதேவனையன்றி இனியாவரோ தேவரென்று சொல்லுதற்குரியராவர். நாங்களெல்லாருஞ் சீவர்களேயாதலால் எங்களைத் தேவரென்று கூறுதலும் உபசாரமேயன்றி உண்மையன்று. மேற்கூறிய பரமுத்தியும் பதிஞானமாகிய சிவஞானத்தாலன்றிப்பசுஞான பாசஞானங்களாற் கிட்டுவதன்று. ஆதலாற் சீவர்களில்

க்கடந்தான், இந்த இரண்டு புருஷரில் எவன் பெரியவன் பக்ஷபாதமில்லாமல் உள்ளது சொல்லுங்கள் அந்தப்புருஷனை அடைவோம் என்பது முதலிய நூறு சுலோகங்கள் பாடியருளி அவ்வைஷ்ணவரெல்லாருஞ் சைவராயுய்யும்படி செய்தருளினார். அந்நூல் அரிஹர தாரதம்மியமென்றபேரால் விளங்குகின்றது. இப்படியே இவர் செய்தருளிய சைவக்கிரந்தங்கள் பற்பல. இச்சரிதம், சிவரகசியம், கஞ்சனூர் மான்மிய முதலிய புராதன நூல்களில் அதிவிஸ்தாரமாயுள்ளன. இப்போதும் கஞ்சனூரில் உற்சவத்தில் நேரே காணலாம்.

Koviloor Digital Library

யாராவது சிவஞானமில்லாமல் தமது அநாதி பந்தமாகிய மலத்துன் பநீங்கி மோக்ஷமடைவோமென்று கூறுவரேல், அது, அரூபமாகிய ஆகாயத்திற் றோலையுரித்து அரையில் உடுத்துக்கொள்ளுவதற்கு ஒப்பாகுமென்று அவ்வேதமே கூறுமானால், * இனி வேறு சாக்ஷியும் வேண்டுமோ?

இவ்வேதங்கள், பரமசிவனுக்கே உரியனவாகக் கூறுகின்ற பரத்துவ நிருபண சத்திய வாக்கியங்கள் இன்னும் அநேகமுள்ளன. இவையெல்லாம் ஒன்றொன்றாக நினைத்து நினைத்துக் கூறுதல் என்னாலும் ஆவதன்று. ஒருவாறு கூறப்புகுந்தாலும், எனது ஆயுள் எல்லையில் முடியாது. திருவருளால், நான் நீடித்த ஆயுள் பெற்றிருந்து பன்னெடுங் கற்பகாலம் கூறினாலும் அக்காலங்கள் கழியுமேயன்றிப் பரமசிவ பரத்துவமகிமை முடிவுபெறாது. இவையெல்லாம் என்னிடத்து நீ முன்னமே உணர்ந்துள்ளாய். அங்ஙனமாகவும், இவ்வாறு கேட்டபடியால் இப்பொழுது அறிவுமயங்கினையோ! நல்லது, என்னையும் விஷ்ணுவையும் ஆங்காங்கு உபசரித்துக்கூறுகின்ற வேதம், பரமசிவனைத் திவ்விய சப்தம் முதலிய பரத்துவ நிருபண சத்திய வாக்கியங்களால் துதிக்கின்ற உண்மைபோல, ஒரு சொல்லாவது எங்களுக்குக்கூறியது உண்டா? எங்களை அங்கங்கே புகழ்ந்ததும் உபசாரமென்றே உலகெலாமுணர்ந்துய்யும்படி, ஆதியிலும் அந்தத்திலும், அப்பரமசிவன் ஒருவனையேயன்றி, எங்கள் பரமாக ஒருசிறிதுங்கூறாது விலக்கிவிட்டதல்லவா. இதனையாவது கண்டிலாயா? நான்கு வேதங்களினும் கூறப்படுகின்ற பொருள்கள் எவையென்றால், பரமசிவன், பிரமவிஷ்ணுவாகிய நாங்கள், மற்றும் முப்பத்துமுக்கோடி தேவர்கள், முனிவர்கள், பஞ்சபூதங்கள் முதலியனவாகப் பல்கோடிகளுள்ளன. இத்தனைகோடி பொருள்களுக்கும் ஒருபாதியும், பரமசிவன் ஒருவனுக்கேபாதியுமாக அந்த நான்கு வேதங்களும் கூறுகின்றன. அங்ஙனம் கூறியது பக்ஷபாதமன்றோ எனின்? அதன்மேலும் எடுத்துக்கூறவேண்டிய முழுமுதற்றன்மை அப்பரம சிவனுக்கே யிருத்தலால் பக்ஷபாதமாகாதென்க. ஆனால் அவரை மேலுங்கூறுதொழி வானேனெனில், அவர்

---

* இதனை, "யதாசர்ம வதாகாசம் வேஷ்ட இஷ்யந்திமாநவா : ததாசிவமவிஞ்ஞாய துக்கஸ்யாந்தோப விஷ்யதி" என்ற சுவேதாச் சுவதரோபநிஷதாதிகளிற் காண்க.

Koviloor Digital Library

மகிமை முழுதுந் தெரிந்துகூறுதல், அவ்வேதங்களுக்குஞ் சாத்தியமன்றாகலினென்க.*

இனிச் சீவவர்க்கத்துட்பட்ட பிரம விஷ்ணுக்களாகிய எங்களையும் பரம்பொருளென்று நினைந்து, சர்வலோகநாயக பரமசிவ பரம்பொருளைக் காட்டிலும், அதிகமான சிறப்புச்செய்து வழிபடுகின்ற கொடுமைமிகுந்த வன்னெஞ்சப்பாதகர்கள், ஒரு காலத்தும் நீங்காத பெருந்துக்கத்தைச் செய்கின்ற கொடியநரகத்தில் ஆழ்ந்துகிடந்து வருந்துவர்கள். ஆனால் அவர்கள், பல்லாயிரம் ஊழிகடந்தாவது ஒருகாலத்தில் அந்நரகத்தினின்றும் வெளிப்படுவார்களோ என்னுஞ் சந்தேகமும் வேண்டாம், அந்நரகம் அவர்களைத் தன்னிடத்திலேயே சேமித்து வைத்துக்கொள்ளுமன்றி, அவர்கள் படும் பெருந்துன்பநோக்கி அந்தோவென்று பரிந்து பெரியர்யாரேனும் அவர்களை அதினின்றும் மேலெடுத்தலைச் செய்தற்கு ஒரு காலத்தும் விடமாட்டாது. அஃது அங்ஙனமாக, இனிப்பரமசிவனைக்காட்டிலும் எங்களை மேலென்றுகூறும் பெரும் பாதகவழிப்படாமல், பரமசிவனுடன் எங்களையும் ஒத்தவர்களென்று கூறுகின்றவர்களும் எங்களையும் சகிக்கலாற்றாத பெருந்துன்பக்கடலில் அமிழ்த்துகின்ற பாவிகளேதவிர வேறில்லை. அது எதனால் என்றால், பரமசிவனை வழிபட்டுய்யவேண்டிய பசுவர்க்கத்துஅடிமைகளாகிய எங்களை, எங்களுக்கு அருள்செய்து உய்விக்கின்ற பசுபதியாகிய பரமசிவனுடன் ஒத்தவர்களென்று அப்பாவிகள் கூறுந்தோறும் எங்கள் மனம் சகிக்காது புண்பட்டு அதிதுக்கத்தழுந்துதலாலென்க. இவ்விஷய விளக்கத்திருவிருத்தம் பின்வருவதுகாண்க. இதுபோலப் பின்னுஞ்சில காண்க.

நம்மையும் பரமென்றுன்னி நாதனிற் சிறப்புச் செய்யும்
வெம்மை கொணெஞ்சர் தீராவிழும வெந்நிரயம் வீழ்வர்

---

* இதனை "மறையினாலயனான் மாலான் மனத்தினான் வாக்கான் மற்றுங், குறைவிலாவளவினாலுங் கூறொணாதாகிநின்ற, விறைவனார்கமலபாதம்" என்னும் பிரபலசுருதியாற்காண்க. இறைவராகிய சிவசொரூபம், வேதத்தாலும் பிரம விஷ்ணுவாதிகளாலும் கூறவும் அறியவுமுடியாதாகில் நாமெல்லாம் அதுபெற முயன்றும் பயனில்லையேயென்று உலகர் விமுகாராகா வண்ணம், அப்பிரபலசுருதி, "அருளினாலாகமத்தே யறியலாம்" என்று அடுத்த திருவிருத்தத்தால் விளக்கியது.

Koviloor Digital Library

தம்மையலீ தெடுத்தல் செய்யாசம மெனப்புகல் சிற்போர்கள்
எம்மையுந் துயரமென்னு மிருங்கடற் படுப்பரன்றே.

இனிப்பிரம விஷ்ணுக்களாகிய எங்களையும் உலகர் வழிபாடு செய்வது எப்படியென்றால், எங்களையெல்லாம்பரமசிவனுக்கு அடிமைகளென்றும், அப்பரமசிவ பூசனையாதிசெய்து சிவானுக்கிரகத்தால் சிருஷ்டி ஸ்திதி கிருத்தியாதிகாரம் பெற்றுவாழுகின்றவர் களென்றும், உள்ளபடி எண்ணி எங்களை வழிபடுகின்றவர்கள் எவர்களோ அவர்களுக்கே அப்பரமசிவன் அருள்வழியினால் எங்களாலியன்ற அநுக்கிரகத்தைச்செய்வோம். அப்படியன்றி எங்களைப்பரமசிவனுக்குச் சமமென்றாவது உயர்வென்றாவது நினைக்கின்ற பாதகர்களை எங்களுக்குப் பகைவர்களேயென்றெண்ணி அதற்குரியன செய்வோம்.

காறுறு புலித்தோலா டைக்கண்ணுதற் கடவுட் கன்ப
ரானவரென்று மன்னாற் கடித்தொழில் புரிந்து வாழும்
வானவரென்று மெம்மை வழுத்தினர்க் கருள்வோ மல்லா
வேனையர் தம்மைத் தெவ்வென் றெண்ணியே யிருத்தும் யாமே.

பிரம விஷ்ணுக்களாகிய எங்களை, இரணியகர்ப்ப வைஷ்ணவ மதத்தலைவர்களாக, உலகர்மேற்கொண்டு வழிபாடுசெய்துவருதல் பிரசித்தமாயிருக்கவும், எங்களைப்பசுவர்க்கத்தரென்றும், பரமசிவனுக்கடிமைகள் என்றும் கூறுவதெப்படியெனில், அது நான்சொன்னதன்று. வேதம் கூறுகின்ற உண்மைவாக்கியமே. அஃதாவது, அநாதிநித்திய பதார்த்தம் மூன்றுள்ளன. அவை பதி பசு பாசம் என்பனவே. பதிபொருவனே. பலரன்று. அப்பதி உமாபதியாகிய பரமசிவனே. பசுக்கள் அநேகமே. அவை பாசக்கட்டுடைமையால் பசுக்களென்னும் பெயர் பெற்றன பாசங்கள், மூன்று ஐந்து எனப்பலதிறப்படுவன. இந்தமுறையால், வேதங்கள், சர்வசங்காரஞ்செய்கின்ற பரமகர்த்தாவாகிய அரனே பரமபதியென்றும், பிரமவிஷ்ணுக்களாகிய எங்களை முதலிய எல்லோரையும் பாசத்திற் கட்டுப்பட்டுழல்கின்ற பசுக்களையென்றும் விதிவாக்கியங்களாகக் கூறுகின்றன. விதியென்றமையால் அவ்வாக்கியங்கள் பரமசிவனுக்குத் துதிபரமாகக்கூறிய தன்றென்பது கருத்து. இந்த உண்மையை நீ செவ்வே தெளிந்துகொள்ளவேண்டுமானால், அதற்கு உபாயம் இதுவென்று சொல்வேன் கேட்பாயாக. அஃதாவது, பிரமவிஷ்ணுக்களாகிய நாங்கள் சத்தியலோக வைகுண்டலோகாதிபத்தியம் பெற்றுவாழுதற்

Koviloor Digital Library

காக, எங்களை யடிமைக் கொண்டாளுகின்ற ஈசநாமப்பெருவள்ளலாகிய பரமசிவனுடைய ஸ்ரீபாதங்களைப் பூசித்துத் துதித்து வரம் பெற்ற சிவாலயங்கள் பற்பலவுள்ளன. அவற்றை நேரே கண்டறியினுந் தெளிவாயாக.

பதியரன் பாசந் தன்னிற் பட்டுழல் பசுகா மென்றே
விதியொடு மறைகள் கூறு மெய்ம்மையைத் தெளிய வேண்டின்
இதுவென வுரைப்பன் யாங்க ளிவ்வ ரசியற்ற வீசன்
அதிர்கழ லருச்சித் தேத்து மாலயம் பலவுங் காண்டி.

தக்கனே, இன்னும் பலவாக அளந்தளந்து கூறுவானேன். முடிவாகக் கூறுகின்றேன் கேட்பாயாக. அப்பரமசிவ னருள்பெறுது முத்தியடைந்தவர் ஒருவருமில்லை. அவன ருள்பெறுமல் வாழுகின்ற தேவரும் மற்றியாவரும் இல்லை. அவனருள் கிடைக்கப்பெற்றவர்களுக்குக் கிடைக்காதபொருள் ஒன்றுமில்லை. ஆதலால் அவனையன்றிப் பரமகர்த்தா வேறொருவனில்லை. இது நம்ஆணை இதனைச்சிரமேற்கொண்டு அப்பரமசிவனையே சரணுக அடைவாய் என்றுபதேசித்தருளினர்.

அவனருள் பெறுது முத்தி யடைந்தனரி ல்லை யல்லால்
அவனரு ளின்றி வாழு மமாரும் யாரு மில்லை
அவனரு ளெய்தி னெய்தா வரும் பொருளில்லை யாணை
அவனல திறைவ னில்லை யவனை நீயடைதி யென்றான்.

இவ்வாறு, பிரமதேவர், தக்கனுக்கு, வேதவேதாந்த சிவாகம சிவபுராணதி சிவசாஸ்திர யுக்தமாயுள்ள உண்மையை யுபதேசித்தனர். இதனை யுற்றுநோக்குவோர்க்கு, அஷ்டமங்கள திவ்விய குண பரமபதியாகிய சிவனொருவனே, அரிப்பிரமேந்திராதிதேவர் முனிவர் முதலிய சமஸ்த சீவர்களையும் தனக்கு அடிமைகளாகக்கொண்டாளுகின்ற ஈசநாம நிருபபதவாச்சிய பூதனுய்விளங்குகின்ற சர்வலோகநாயகனென்பதும், பிரம விஷ்ணுவாதி தேவர்களை அப்பரமசிவனுக்கு அடியவர்களாக்கொண்டு வழிபடுதலே முறையென்பதும், ஒருவாறு சிலர் மதிமயங்கி அத்தேவர்களைப் பரமசிவனுடன் சமமாகக்கொண்டு வழிபடுவாராயின், அது சிவசாஸ்திர விரோதமா மென்பதும், சமமாக நினைத்தாலும், அதுவும் அப்பிரம விஷ்ணுவாதி தேவர்களுக்கும் பெருந் துன்பந்தருவதோர் பாவகாரியமே யாமென்பதும், அப்பாவகாரியத்துக்கு ஆளாகாமல் சிவசாஸ்திர யுக்தப்படி நடப்பதே துணிவென்பதும் தெளிவாக விளங்கும்.

Koviloor Digital Library

இத்தெளிவை உற்றுநோக்காது சில மாயாவாதிகள், பரமசிவனையும் விஷ்ணுமூர்த்தியையும் சமமாகவே மனத்திற்கொண்டு பிறர்க்கும்போதித்தல் சபைகளிற்பிரசங்கித்தலாதிசெய்கின்றார்கள். இவர்கள் மேற்கொண்ட நூல்களில்ஒன்றாகிய பிரமகீதையில்,

ஐதரேயோபநிடதத் தாற்பரியக்கூறு மத்தியாயத்திலே,

பொருள்கொண்ட மறையென்று புகல்கின்ற துணரார்
மருள்கொண்ட சமயங்கண் மதிகொண்டு கதியாய்
அருள்கொண்ட பரவின்ப மடைகின்ற வவர்போ
லிருள்கொண்டு பொருள்கண்ட வவரன்றியிவரார்.

வேதஞ்சொன படியொழிய வேறுஞ்சில கலைகளினை
யோதுந்திற மருவிமறை யோதுஞ்சிவ னிருகமல
பாதந்தொழ லினைவிலர்கள் பாசண்டிக ளெனவுணர்க
நீதொன்றிய வவர்களொடு சேருங்கலர் களுமவர்கள்.

என்று கூறுமிதனால், சிவசம்பந்த சைவசமயமே சற்சமயமென்பதும், ஏனைச்சமயங்கள் மருள்கொண்ட சமயமென்பதும், வேதஞ்சொன்னபடி சிவசாஸ்திரங்களை மேற்கொள்ளாது கைவிட்டு, வேறு சில கலைகளைப் படித்துச், சிவபாதங்களில் அவிபபிசாரபக்தி செய்வதொழிந்தவர்கள், பாசண்டிகளென்பதும் அவர்களுடன் சேருகின்றவர்களுங் கீழ்மக்களேயென்பதுந் தெளிவாகின்றது. இனிக

கேநோபநிடதத் தாற்பரியக்கூறு மத்தியாயத்தில்,

பரமனை தருநூண் டாயிடத் தீடம் பதங்களா னுடவரோ டசுரர்
சுரரினை யருந்த ஞானமுண் டவனே சுடர்மிகு ஞானமிக் களிப்போன்
அரியிறு லென்று மவனரு ளின்றி யளித்திடப் படாதொரு பொருளுஞ்
சுராகளை தரவும் வாங்கவு மாங்கள் சுதந்திர ரல்லர் மெய் சொல்லில்.

சுதந்திரன் சிவனே யவனன்றே பிறவிச் சுழனின் றெடுப்பவ னவன்றன்
பதங்களா லன்றி யெங்களை யெடுக்கப் படாதொரு செந்தவு மெங்கண்
மதங்களை யொழிய வருளினுற் பிறவி மாற்றவு வல்லமற் றொருவன்
திறம்பெற வழங்கும் போதுதான் வழக்குஞ் செய்வது தருவியே போல.

பாகுதி யென்பால் வைத்திடப் பட்ட பத்தியாலு நமது வன்றி
உமாமேற் றயில்வோன் பாலுமென் பாலு முற்றபத் தியினிலுண் டாகா
திரமுற சிவபத் தன்றனு கந்தத் திருவரு ளொளி மிகத் திகழும்
பரிசரி பத்தர்க் கெனதுபத் தர்க்குப் பரமுற சேழ்வுறப் படாதால்.

ஆத லாலரிய யென்னை யாதரவு செய்தி டாதரன் மகேசனைக்,
காத லாலடைக முத்தி சித்திபெறு கச்சி டைக்குமரு செய்தமப்

Koviloor Digital Library

போதி லேயரிய ஞபி ஹுக்தனது பூர ணப்புரண மானசிற்
சோதி யேமுழுது மாகி நின்றபடி தோன்று மா்றுவெளி தோன்றுமால்

என்று கூறுமிவற்றால், சிவனருளாலேயே யாவர்க்குஞ் சிவஞானமுண்டாகும். பிரமவிஷ்ணுக்களால் ஒரு பொருளுந் திருவருளின்றிக் கொடுக்கமுடியாதென்பதும், அவர்கள் பரதந்திரர்களே யென்பதும், சர்வசுதந்திரன் சிவனே யென்பதும், அவனே யாவரையும் பிறவிச் சூழலினின்று மேலெடுப்பவனென்பதும், பிரமவிஷ்ணுக்களால் அவனருளின்றி ஒரு செந்துவையேனும் பிறவியினின்றும் மேலெடுக்கமுடியாதென்பதும், அவர்கள் தமதுவல்லபத்தாலன்றிச் சிவனருள்வலிபாற் சிலர்க்குப் பிறவியை மாற்றுவது, ஒரு அன்னதாதாவின் கையிலுள்ள அகப்பை பிறருக்கு அன்னங் கொடுத்தல்போலாமென்பதும், சிவபக்தியினாலேயே பரகதி யுண்டாமென்பதும், பிரமவிஷ்ணு பக்தியாலுண்டாகாதென்பதும் சிவபக்தர்கள் திருமேனியிலே விபூதிருத்திராக்ஷாதி சிவத்துவப் பிரகாசம் விளங்குதல்போல் பிரமவிஷ்ணு பத்தர்கள் மேனியில், விளங்காதென்பதும், ஆனபடியினாலே, பிரமவிஷ்ணுக்களை யாதரித்துக் காலங்கழிக்காமல், அரன்மகேசனையே பக்தியுடன் ஆதரித்தடைய வேண்டுமென்பதும், அடைந்தால் இஷ்டசித்தியாதி யிம்மைப்பயனும் பரமுத்தியுங் கிடைக்குந்திருவருள் அப்போதேவிரைந்து கைகூடுமென்பதும், அப்பரமசிவன் பிரமவிஷ்ணுவாதியர்க்கு அரியனாயினும் தனது பரிபூரணவிளக்கமான சுயம்பிரகாச சொரூபியாய் எங்கு நிறைந்து நிற்குந்தன்மை சிவபத்தர்களுக்குத் தோன்றும்படி அம்பா சமேதனாய் வெளிப்பட்டு வந்தருளுவா னென்பதும் தெளிவாய் விளங்குகின்றது. இனிச்

சாந்தோக்கிய உபநிஷத தாற்பரியங்கூறு மத்தியாயத்திலே,

ஆக மங்கள் பலவுமுரை யாடு கின்ற திவனையனு
போக மொன்றி லறியுமறி வாகி நின்ற புனிதனிவன்
ஏக னந்த வனுபவம தேயி வன்றன் வடிவிதனை
யோக மொன்ற வருள்பவனு மோது கின்ற பரமசிவன்.

கானு மந்த வரியமரர் ஞால மொன்று நார்விவித
யோனி யிந்த முழுதுமிவ னூடெ ழுந்த சிறுதிவலை
தானெ ழிந்து சிறிதில்சிவ சாக ரந்த னிகாரியை
ஊன மொன்று மெனை மொழிவ ரோர்வொ ழிந்த வுணர் விலிகள்.

எறிக திர்க்குநிக ரயின் மின்மினி யிறைக்கு நேரரியு மெட்டிதான்
நறுவி ரைக்கொளவில் சந்தொ டொக்குமெனி ஞனு மப்பரம னேடெதிர்

Koviloor Digital Library

அறிவி லக்கறிவி லாமை வேசில னாய கற்கொருவர் நேரெனிற்
செறிய வுற்றவறி யாமையின்செய லிருந்த வாறெனது செப்புகேன்.

என்று கூறுமிதனால், வேதசிவாகமாதி சிவசாஸ்திரங்களால் ஒப்புயர்வில்லாதவ னென்று விதந்தெடுத்தோதப் பெறுகின்றவன் பரமசிவனே யென்பதும், அவன் சிவானுபவத்தாலறியப்பெறுகின்ற சிற்சொரூபனாகிய நிஷ்களங்க பரிசுத்த னென்பதும், பிரமவிஷ்ணு வாதியருடன் சமமாக உடன்வைத்தெண்ணப்படாத ஏகனே யென்பதும், சிவானுபவசொரூபி யென்பதும், அச்சிவானுபவப் பெருவாழ்வை யடைந்நின்றவனுமவனே யென்பதும், பிரமவிஷ்ணுவாதி தேவர் முனிவர் மனுடர் முதலிய சமஸ்தசீவர்களும், பெருஞ்சமுத்திரம்போல எங்குநிறைந்த பரமசிவனிடத்து ஒடுங்கு காலொடுங்கித் தோன்றுஞ் சிறு திவலைப்பிராயர்களன்றி வேறில்லையென்பதும், மலசகிதர்களாகிய பிரமவிஷ்ணுவாதிகளை மலரகிதனாகிய அப்பரமசிவனுடன் ஒப்பெனக் கூறுபவர்கள் உய்த்துணர்வில்லாத அறிவிலிகளே யென்பதும், லோகப்பிரகாசகனாகிய சூரியனுக்கு மின்மினி நிகராகுமாகில் பரமசிவனுக்கு விஷ்ணு நிகராவர்; நறுமணங்கமழுகின்ற அகருசந்தன விருக்ஷங்களுக்குக் காஞ்சிரமரம் நிகராகுமாகில் அப்பரமசிவனுக்குப் பிரமதேவர் நிகராவர்; ஞானத்துக்கு அஞ்ஞானம் நிகராகுமாகில் சர்வலோகோபகாரகிய சிவனுக்கு மற்றொருவர் நிகராவர்; இவ்வுவமைகளை நோக்கியாவது பிரமவிஷ்ணுக்களைப் பரமசிவனடியர்களென்று கொள்வதொழிந்து, ஒத்தவர்களெனக்கொள்வது இறுகப்பற்றிய அறியாமையின் செய்கையேயென்பதும் வெட்டவெளிச்சமாய் விளங்குகின்றது.

இவ்விதமாகப் பிரமகீதை, வேதாந்த தாற்பரியம் இதுவேயென்றுகூறி இருக்கவும், மேற்கூறியபடி மாயாவாதிகள் சிலர், சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சமத்துவங்கூறிச் சபைகளிலும் பகிரங்கப்பிரசங்கஞ் செய்வதென்னையோ? ஈசுரகீதையில், ஏதமற நாரணனையென்னிலயக்கூறும், பேதமிழிபாளர்பிறவிப்பிணியழுநர்கள். என்றிருத்தலால், சமத்துவங்கூறுதல் பொருத்தம் என்பர்போலும். ஆனால், மேற்கூறியதும்இதுவும்மாறுபடுகின்றதே, இந்தஈசுரகீதை ஈசுரன் கூறியது, பிரமகீதையோ ஈசுரானுக்கிரகம் பெற்ற பிரமா கூறியது. இவ்விருவரும் மாறுபடக்கூறுவார்களா? இவ்விரண்டையும் தமிழில் மொழிபெயர்த்தவர் தத்துவராயர் ஒருவரே; இவர்தாம்

Koviloor Digital Library

கூறுவனவற்றில் ஒன்றுக்கொன்று நேர் விரோதமாகக்கூறுவராகி முன்னையோர் கூறுவன ஒன்றுக்கொன்று மாறுபடாதாதலால், மேற்கூறிய இரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாகாதென்பது தாற்பரியம் நோக்கி நிச்சயிக்கவேண்டிய விஷயம். அஃதாவது பிரமகீதையிற்கூறியதை மாத்திரம் மேற்கொண்டானொருவன், விஷ்ணுமூர்த்தியை வழிபடவேண்டிய முறையினும் வழிபடாமல் பராமுகஞ்செய்து புறக்கணிப்பனாதலானும், ஈசுரகீதையிற் கூறியதை மாத்திரம் மேற்கொண்டானொருவன், வேதவேதாந்த சாஸ்திரவிரோதமாக விஷ்ணுமூர்த்தியைச் சிவனுக்குச் சமத்துவமாக வைத்து வழிபடுவானாதலானும், அவ்வாறு சாஸ்திரவிரோதம் நிகழாமற் பொருட்டுக்கூறியனவன்றி மாறுபடக்கூறியதல்லவென்று தெளியவேண்டியதே. இத்தெளிவினால், விஷ்ணுமூர்த்தியைச் சிவலிங்கத்தின் பீடவகையினும், பரிவாரவகையினும் வைத்து பிரதிதினமும பூசித்து வரவேண்டியது அத்தியாவசியம் என்று சிவாகமங்கள் கூறுதலை நோக்காது, பிரமகீதாவசன நோக்கி விஷ்ணுபூசனையை நழுவவிடுவாரை அங்ஙனமாகாது பாதுகாத்தற் பொருட்டுக்கூறியது ஈசுரகீதாவசனமென்பதும், அதனை நோக்கி விஷ்ணுவை சிவசமமாகக்கொண்டு பூசித்து சிவாஞ்ஞைகடந்த குற்றத்துக்காளாகாமல் பாதுகாத்தற்பொருட்டுக் கூறியது பிரமகீதா வசனமென்பதும், பட்சபாதமில்லாத நிச்சயவிளக்கமென்னும் உண்மைதெளிவாயது. ஆகவே, பிரமவிஷ்ணுவாதி தேவர்களை வழிபடுவோர் அவர்களைப் பரமசிவ பக்தர்களாகிய பரிவாரதேவர்களாகக்கொண்டு வழிபடவேண்டியதே வேதவேதாந்தாதிசாஸ்திர சம்மதமாகும். வேறுசிலர்சூரியன் நாராயணன் கணபதி அம்பிகை சிவன் ஆகிய ஐவரையும் ஒரே ஆசனத்தில் சமமாகவைத்துப் பூசிக்கின்றார்கள். பூசிக்கின்ற அவர்களே, சூரியநாராயணாதி தேவர்களைப்பரமசிவ பக்தர்களென்றுகூறி, அப்பரம சிவோத்கரிஷங்கள் சுருதியாதிகளில் அதி விஸ்தாரமென்று விதந்தெடுத்துப் பாராட்டுகின்றார்கள். அங்ஙனம் பாராட்டுகின்றவர்கள், ஒரு அரசனையும், 'அவனுடைய பரிசேவகர்களையும், ஒரு ஆசனத்தில்வைப்பது முறையாகுமா? அது உலகவழக்குச்சாஸ்திரவழக்கு இரண்டினுமில்லையே. அப்படிவைத்து உபசரித்தால் அரசன் கோபத்துக்கு ஆளாகுவதே அன்றி வேறில்லையே. அதுபோல அனாதிமுத்த பரமபதியாகிய சிவபிரானையும், அவனடிமைகளாகிய விஷ்ணு வாதியரையும், சமமாகவைத்து வழிபடுதல் சிவசாஸ்திர சம்மதமல்லவே; அது சிவாபசாரமாகுமே யென்பதை உற்றுநோக்கி யடிக்காததென்னையோ? ஆத்மார்த்தபரார்த்தங்களாகிய இஷ்டலிங்கார்ச்சனை சிவாலய நித்திய நைமித்திக காமிய பூசனைகளின் விதிக்கிரமங்களை அதி விஸ்தாரமாகக் கூறுவன சிவாகமங்களே அவைகளை அரு

Koviloor Digital Library

ளிச் செய்த கர்த்தா பரமசிவனே ஆதலால், சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவுடைய சீவவர்க்கத்தினராய்த் திரிகுணவசப்பட்டு நிற்பார் சிலர், முன்பின் முரண்படக் கூறுவனவற்றை மேற்கொள்ளாது, அநாதிமுத்த குணாதீத நித்திய பதியாகிய பரமசிவ வாக்காகிய சிவாகம விதிக்கிரமங்களையே மேற்கொண்டு, அப்பரமசிவனையே சர்வகர்த்தாவாகவும் பிரமவிஷ்ணுவாதிதேவர்களைப் பரிவாரர்களாகவும் உரிய தானங்களில் வைத்துத் தினந்தோறும் நியமமாகப் பூசித்து வழிபாடு செய்துய்யும்பொருட்டு ஸ்ரீ கணேசஸ்கந்த சாம்ப பரமேசுர சரணாரவிந்தங்களைப் பணிந்து பிரார்த்திக்கின்றேன். சுபம்!

முற்றிற்று.

ஜீ. பி. வொர்க்ஸ் காரைக்குடி.

Koviloor Digital Library

Koviloor Digital Library